44




குடும்பத்திட்டமும் கருத்தடையும்
புதிய திண்டாச்சாதி
சிலியின் புதிய அரசியலமைப்பு
மூன்றுலக முக்கோண முரண்பாடுகள்
தரகு முதலாளித்துவம் 3
கந்தன் கருணை - ஒரு புதிய திருப்பம்
சரியான கணக்கு
பாட்டில் தெறித்த பொறி 2
மயக்கங்கள் திரட்டும்
இலக்கிய உலகில்! கேள்வி? பதில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 பிப்ரவரி 1975

# இலக்கிய உலகில்!

— ஆனந்தி

சென்னையிலிருந்து 'விடியல்' என்ற புதிய புரட்சிகர கலை, இலக்கிய விமர்சன மாத இதழ் தைத் திங்களிலிருந்து வெளிவரத் தொடங்கியிருக்கிறது. முதல் இதழில் யமுனா புத்திரன் எழுதிய நீண்ட கவிதையும் இன்குலாப் கவிதைகள் பற்றிய துணிச்சலான விமர்சனமும் வெளிவந்துள்ளன. 'அம்மாவுக்கு ஒரு குழந்தையின் தாலாட்டுப் பாடலில்' யமுனா புத்திரன் பின்வருமாறு எழுதுகிறார் :

எங்கள் அம்மாக்கள்
பிறக்கிற குழந்தைகளிடமெல்லாம்
காந்தி என்ன வாங்கிக் கொடுத்தார்
என்று வியாபாரம் பேசி
'சுதந்திரம்...' என்று
சொல்லிக் கொடுக்கிறார்கள்

விழாக்கால கும்பலில்
வழி தப்பிய குழந்தையிடம்
அழுகிய ஆரஞ்சை
வாங்கி கொடுத்துவிட்டு
தங்கச் சங்கிலியை கழற்றிக்கொண்டு
'மாமா என்ன கொடுத்தார்'
என்று கேட்டு
'ஆப்பிள்...' என்று பதில் வாங்கும்
திருடனைப் போலுள்ளதேயிது.

இன்குலாப்பின் கவிதை விமர்சனத்தில் பின்வரும் பகுதியை எம் நாட்டு கவிஞர்களும் கவிதை எழுதும்போது கருத்திற் கொள்வது நல்லது :

'சேரிப் புதல்வர்களின்
சிவப்பு விழிகளில்
பிர்லா மாளிகைகள்
சாம்பலாகின்றன '

அழகான கற்பனை; சுகமான கற்பனை; ஏன்... இந்தியா சிவப்பாகி விட்டது என்றுகூட கற்பனை செய்து கவிதை எழுதிவிடலாம். இப்படி எழுதியே இந்தியாவை சிவப்பாக்கிவிட முடியாது. இது அதீத கற்பனை. இதுபோன்ற கற்பனைகள் செயலைத் தடுக்கின்றன.

எழுதியே (காகிதப்) புரட்சி செய்துவிடலாம் என்பதில் உள்ள வேகம் இன்குலாபை துப்பாக்கியைவிட எழுதுகோலுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய நிலைக்கு கொண்டுபோய் நிறுத்தியுள்ளது.



'பிரகடனம்' கவிதையில் எழுதியுள்ளார் :

' இளைய தலைமுறை! எழுக, நமது
எழுதுகோலால்... இரும்புத் துப்பாக்கியால்
விடுதலைராகம் மீட்டுவதற்கு
பூமி வீணையின் புழுதியைத் துடைப்போம் '

எழுதுகோலால் புரட்சிகர கலை, இலக்கியத்தைப் படைக்க முடியும்; புரட்சிக்கான மனப்பக்குவத்தை மக்களிடம் உருவாக்கமுடியும்.

எழுதுகோல் என்பது கலாச்சாரப்படை
துப்பாக்கி என்பது மக்களை விடுவிக்கும் ஆயுதப்படை.

எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பதில் செய்யும் தவறுகள் கடுமையாக விமர்சிக்கப்பட வேண்டியவை. இதுபோன்ற தவறுகள் புரட்சிகர இலக்கியத்தில் பிடுங்கி எறியப்படவேண்டிய களைகள். 'நடுவே கிளம்பிநிற்கும் கோரப்புல்களை வெட்டி வீசணும்' என்று 'களையெடுப்பு' கவிதையில் சொல்லுகிறார். இதுபோன்ற வெட்டி வீசப்பட வேண்டிய களைகளை இவரே வளர்த்து விட்டிருக்கிறார்.

இத்தவறுகளை மேலோட்டமாய்ப் பார்த்து மயக்கம் என்று சொல்லிவிடலாம்; தத்துவக் கண்ணோட்டத்துடன் தீர்க்கமாய் பார்க்கும்பொழுது திரிபு என்றுதான் சொல்லவேண்டும்.

'இளைய சந்ததி பூமியைத் திருப்புக' கவிதையிலும் இதே தவறைச் செய்திருக்கிறார்.

'ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் உனது
நெருப்புக்கரங்கள் எவை எவை, கூறுக'

ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் கருவிகளை வரிசைப்படுத்துகிறார்.

அரிவாள்... கத்தியல்... உழுபடை... பேனா... வயலின் இத்தனைக்கும் பிறகு — துப்பாக்கி.

* * *

புத்தளத்திலுள்ள கலை, இலக்கிய ஆர்வமுள்ளவர்களும் எழுத்தாளர்களும் ஒன்றிணைந்து 'விடிவெள்ளிகள்' என்ற பெயரில் சங்கம் அமைத்துள்ளனர். இதே பெயரில் சிற்றேடு ஒன்றையும் வெளியிட உள்ளனர்

* * *

மன்னாரில் 'மதம் மாறினர்' என்ற நூல் வெளியீட்டு விழாவில் 'சிந்தனைக்கு விலங்கெதற்கு?' என்ற தலைப்பில் புரட்சிக்கவிஞன் 'சே' தலைமையில் கவியரங்கமும் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டில் தெறித்த பொறி - 2

— த. ச. இராசாமணி —

மிகப் பழங்காலந்தொட்டே அரசு இருந்ததில்லை. அரசின்றியே வாழ்ந்த மனித சமுதாயங்கள் உண்டு. அரசையும் அரசு அதிகாரத்தையும் கனவிலும் கருதியிராத சமுதாய அமைப்பு இருந்ததை வரலாற்றில் காண்கிறோம். சமுதாய வளர்ச்சியின் - பொருளியல் வளர்ச்சியின் - ஒரு கட்டத்தில் சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுண்டன. வர்க்கங்கள் பிளவுண்டாலும் அவைகள் இணைந்தே சமுதாயத்தில் செயல்பட வேண்டிய நிலை இருந்தது. இருப்பினும் அவ்வர்க்கங்களிடையே நிலவிய பகை இணக்கங்காண முடியாதவை. பிளவும் அவைகளிடையேயுள்ள பகை முரண்பாடுகளும் அரசின் தோற்றுவாயாக அமைந்தன. ஆளும் வர்க்கம் ஆளப்படும் வர்க்கம் என்றாயின. மிகப் பெருவாரியான மக்களுக்கு விரோதமாய் மிகச் சொற்பமான சிறுபான்மையினரது சுயநலத்துக்காக அரசு தேவைப்பட்டது. அரசு ஆளும் வர்க்க நலனை எதிரொலிபபது. ஆளும் வர்க்கம் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அடக்கி ஆள ஓர் ஆற்றல்மிக்க கருவியாக அரசு பயன்பட்டது. அது பலாத்காரத்தையே உள்ளீடாகக்கொண்ட ஒரு தனி வகை ஒழுங்கமைப்பு; ஏதோ ஒரு வர்க்கத்தை அடக்குவதற்கான பலாத்கார ஒழுங்கமைப்பு. ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அரசியல் முறையில் அடக்கி வைக்கவும் சுரண்டலை நிலைப்படுத்தவும் அரசு பயன்பட்டது மக்கள் உரிமைக்காகப் போராடும் போதெல்லாம் ஆளும் வர்க்கம் அப்போராட்டங்களை ஈவிரக்கமின்றி அடக்க அரசு யந்திரத்தைப் பயன்படுத்தும்.

எந்த ஒரு நூலும் வர்க்கச் சார்புடையதே. வர்க்க சமுதாயத்தில் வர்க்கச் சார்பற்ற நூல் தோன்ற முடியாது. ஒரு நூல் எதிரொலிக்கும் வர்க்கத்தை நாம் தெளிவாக வரையறுப்பதின் வழியாகவே அந்நூல் வெளிப்படுத்தும் சமுதாய உணர்வுகளை நாம் நன்கு அறிந்து கொள்ள முடியும்; எவ்வர்க்கச் சார்புடையது என்பதையும் எவ்வர்க்கப் போராட்ட உணர்வுகளைக் கூர்மைப்படுத்துகிறது அல்லது கூர் மழுங்கச் செய்கிறது என்பதையும் அறிந்துகொள்ள முடியும். வர்க்கச் சார்புடைமையை எவ்வாறு கணிப்பது என்பதை வரையறுத்துவிட்டால் வள்ளுவரின் முழுமையான சமுதாயக் கண்ணோட்டத்தை நாம் நன்கு விளங்கிக் கொள்ளலாம். பின்வருவன அவற்றிற்கு அளவுகோலாகும் :

(1) அரசியல் அதிகாரம் யார் கையில் இருக்க வேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறது ?

(2) எந்த வர்க்கம் தன் காலத்தில் சமுதாயம் முழுமைக்கும் தானே பிரதிநிதியாய் இருந்தது ?



(3) எந்த வர்க்கத்தின் உற்பத்தி உறவு முறை எடுத்துக் கூறப்படுகிறது ?

அரசியல் - அதிகாரமே மற்ற அதிகார அமைப்புக்கள் அனைத்துக்கும் முதுகெலும்பு. அரசியல் அதிகாரத்தை யார் கையில் எடுப்பது - செயற்படுத்துவது - என்பதில் வள்ளுவர்க்குத் தீர்க்கமான ஒரு முடிவுண்டு. இதனை நாம் கருத்திற் கொள்வதின் வழியாகவே வள்ளுவர் கூறும் ஆளும் வர்க்கத் தன்மையைத் தெளிவாக வரையறுத்துக்கொள்ள முடியும்; அவர் எவ்வர்க்க நலனை வெளிப்படுத்துகிறார் – எவ்வர்க்க நடைமுறைகளை நியாயப்படுத்துகிறார் – என்று நாம் புரிந்துகொள்ள முடியும்.

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பால்களை - பிரிவுகளைக் கொண்டது. பொருட்பாலில் முதலியல் அரசியல். நம் வரையறைக்குரிய சான்றுகள் பல்வேறு இடங்களில் காணப்படினும் இவ்வியலில் மிகுதியும் காணப்படுகின்றன.

அரசியலின் முதலதிகாரம் இறைமாட்சி. இறைமாட்சி என்பது மன்னனின் இயல்புரைத்தலாம். அதில் முதற்குறள்

''படைகுடி கூழ் அமைச்சு நட்(பு) அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு'' என்பது

எடுத்த எடுப்பிலேயே அரசனின் இயல்பை - ஆட்சி முறையை - அரசநீதியை - விளக்க முனைகிறார். படை, மக்கள், பொருள், அமைச்சு, நட்பு, அரண் என்று ஆறு உறுப்புக்களைக் கொண்டு அரசு இயங்க வேண்டும் என்றும் அவ்வாறு இயக்குபவனை அரசருள் தலைவன் என்றும் கூறுகிறார் அரசியல் அதிகாரம் நிலவுடைமையின் தலைவனான மன்னன் கையில் இருத்தல் வேண்டுமென்று வள்ளுவர் திட்டவட்டமாக வரையறுக்கிறார்.

படை முதல் உறுப்பாக இக்குறளில் இடம்பெற்றிருக்கிறது. பிறிதோரிடத்தில் படை அரசனுக்குத் தலையாய செல்வமென்று குறிப்பிடப்படுகிறது (குறள் 761). ஆளும் வர்க்கம் தனக்குத் தொண்டூழியம் செய்யக்கூடிய ஆயுதமேந்திய ஆட்களைக் கொண்ட தனிவகை நிரந்தரப்படையொன்று வைத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறார்.

வள்ளுவருக்கு முன் தமிழ் நாட்டில் பேரரசுகள் உருவாகிவிட்டன. அவ்வரசுகள் தன் படைபலத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தன. அப்பேரரசுகள் தம் நாட்டை விரிவுபடுத்த (புறம் 8 : 1—3), சிற்றரசுகளை ஒழித்துப் பேரரசை உருவாக்க (தலையாலங்கானம், வெண்ணிப் பறந்தலை, வாகைப்பேர் முதலிய இடங்களில் நடந்த போர்) அரசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையைப் பெற (புறம் 213), தனக்கு மானக்குறைவு ஏற்பட்டவிடத்து (புறம் 73), பிறன் ஒருவனுடைய மகளைத் தனக்கு மணம் செய்து கொடுக்குமாறு அரசன் ஒருவன் வற்புறுத்தியபொழுது அம் மகளிரையுடையவன் மறுத்த காலத்தும் (புறம் 336 முதல் 354ஆம் செய்யுள் முடிய) போர் நடத்தியதையும் படையைப் பயன்படுத்தியதையும் சங்க இலக்கியத்தின் வாயிலாக அறிகிறோம். வள்ளுவத்துக்குப் பின் தோன்றிய சிலப்பதிகாரமும் படைகொண்டு கள்வனைக் கொல்லுதல் அரச நீதி என்கிறது (சிலப். 20 : 64—65).

படையை முதன்மை உறுப்பாகக் கூறிய வள்ளுவர் அப்படை பயன்படும் நோக்கத்தைக் கருத்தில் கொண்டே கூறியிருப்பார். அந்நோக்கம் எதுவாய் இருக்கும்? இவ்வினா எவர் உள்ளத்திலும் எழுவது இயல்பே.

பரந்து கிடக்கும் படை பற்றிய செய்திகளை முறைப்படுத்தினால் அவை மூன்று அமைப்புகளுள் வந்து அடங்கும் :

1. பகிரங்க வர்க்கப் போராட்டங்கள் எழும்போது அவற்றை அடக்குதல்;
2. தற்காப்பு;
3. நாட்டை விரிவுபடுத்துதல்.

வர்க்க முரண்பாடுகளும் — மோதுதல்களும் — முற்றி முதிர்ந்த நிலைகள் அவர் காலத்தில் இருந்ததைக் குறட்பாக்களிலிருந்து நாம் உணர முடிகிறது. மன்னனுக்கு — ஆளும் வர்க்கத்துக்கு — நிலப்பிரபுத்துவத்துக்கு — மாறுபட்ட சக்திகள் வலுப்பெற்றிருந்தது தெரிய வருகிறது.

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு — குறள் 735

(மாறுபாடு கொண்ட பல வகைக் குழுக்களும் உடனிருந்தே அழிவு செய்யும் உட்பகையும் அரசனை வருத்துகின்ற கொல்லுந்தன்மையான கூட்டமும் இல்லாதது நாடு).

அரசனோடு மாறுபாடு கொண்டிருந்த குழு எவை என்பது நம் சிந்தனைக்குரியது. அவை மாறுபாடு கொள்ளவேண்டிய தேவை — சூழ்நிலை — ஏன் ஏற்பட்டன? மன்னனை வருத்திக்கொள்ளும் தன்மையான கூட்டம் மன்னனின் படைபலத்தையும் மீறி உருவாகக் காரணம் என்ன? உட்பகை ஏற்படும் நிலை உருவானதேன்? இக்கேள்விகளுக்குச் சமுதாய விஞ்ஞானம் மிகவும் எளிமையாக — சரியாக — விடையிறுக்கிறது. வர்க்க சமுதாயத்தில் பகை முரண்பாடுகள் இருப்பதும், கூர்மையடைவதும் தவிர்க்க முடியாதவை.



வர்க்க முரண்பாடுகள் இருந்ததை வள்ளுவர் பல்வேறு இடங்களில் பல்வேறு குறட்பாக்களில் உணர்த்துகிறார். குறிப்பாக நாம் ஒன்றினைக் குறிப்பிடலாம் :

இல்லாரை எல்லோரும் எள்ளுவர் செல்வரை
எல்லோரும் செய்வர் சிறப்பு.

வறுமையின் கோரப்பிடியில் சிக்கியோர், வறுமையின் இன்பத்தை நுகர்வோர் என்ற இரு வேறுவகைப்பட்ட நிலையினரை அவர் எடுத்துக் காட்டுகிறார். உழைப்புச் சக்தியை விற்பவன் வறுமையில் வாடுகிறான். அவன் எந்த வாய்ப்பும் வசதியும் பெற முடியாமல் கூலி, வேலைக்காரன், அடிமை, இழிசினன் என்று ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகிறான். சொத்துடையவன் — உற்பத்திக் கருவிகளைக் கையில் வைத்திருப்பவன் — பல்லாயிரக்கணக்கான மக்களின் உழைப்பைச் சுரண்டும் வாய்ப்பும் வசதியும் பெறுகிறான். அவன் வளமையை நுகர்வதோடு ஆளும் வர்க்கத்தால் அரவணைக்கப்படுகிறான் என்பதை வள்ளுவர் நன்கு உணர்ந்திருக்கிறார்.

அரசனுக்குப் பொருள் வரும் வழியை வள்ளுவர் கூறுகிறார். அரசன் தன் பகைவரை அழித்துக் கப்பமாகக் கொள்ளும் பொருள் (குறள் 756) என்று அதில் குறிப்பிடுகிறார். பகையை வெல்லக் கருதும் அரசனுக்கு அதற்கு ஏற்ற காலம் இன்றியமையாதது (குறள் 481) என்று வேறோர் இடத்தில் சுட்டிச் செல்கிறார். பகையை வெல்லக் கருதுதலும், பகைவரை அழித்துக் கப்பம் கொள்ளுதலும் ஆகிய தொடர்கள் உணர்த்தும் பொருள் என்ன? நாட்டை விரிவாக்கும் நோக்கமன்றோ?

வர்க்க முரண்பாடுகளும் மோதுதல்களும் தோன்றும்பொழுது மாற்று வர்க்கத்தினரைக் கொன்று ஒழிக்க (குறள் 550) வேண்டுமென்றும், முள் மரத்தைச் செடியிலேயே பிடுங்கி எறியவேண்டுவதுபோல் தொடக்கத்திலேயே அழிக்க வேண்டுமென்றும் (குறள் 879), எள்ளின் பிளவைப் போன்று சிறியதாயிருந்தாலும் பின் அது வளர்ந்து பேரழிவை உண்டாக்குமென்றும் (குறள் 889), முற்றிலுமாக அழிக்கப்படாத தீ வளர்ந்து அழிப்பதுபோல முற்றிலும் அழிக்கப்படாத பகையும் பின் வளர்ந்து அழிக்கும் (குறள் 674) என்றும் கூறுகிறார்.

நாட்டின் தற்காப்புக்காக படையைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பது வள்ளுவரின் அடுத்த கொள்கை (குறட்பாக்கள் 765, 767).

நாட்டை விரிவுபடுத்த மன்னனுக்கு ஆர்வமூட்டுகிறார். சோம்பல் இல்லா மன்னவன் உலகமெல்லாம் தன் ஆளுகைக்குள் கொண்டுவருவான் (குறள் 610) என்று குறிப்பிடுகிறார். எப்படிக் கொண்டு வருவான்? இதை வள்ளுவர் வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை. ஆனால் நம்மால் ஊகிக்க முடியும், சுரண்டும் வர்க்க அரசு எதுவும் தன் வர்க்க நலன் கருதித் தன்னெல்லையை விரிவுபடுத்திக் கொள்வதும் தன் சந்தையைப் பெருக்கிக் கொள்வதும் நம் காலத்தில் உணரப்படும் செயல்கள்தாமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி ? பதில் !

'வேல்'

கே: உணவுப் பிரச்சனையை எளிதில் தீர்க்கத்தக்க வழி ஒன்று கூறுவீர்களா?

— மூ. தம்பிராசா – கிளிநொச்சி.

ப: பணக்காரரை ஏற்றிச் செல்லும் கார்களின் சக்தி அனைத்தையும் நீர்ப்பாய்ச்சுவதற்கு பயன் படுத்த முடிந்தால் எமது நாட்டின் தேவைக்கு மேலாக உற்பத்தி செய்ய முடியும். அப்போது. செல்வர்கள் கார்களில் உலாவுவது நிற்கவே செய்யும்.

கே: கட்டானை, காங்கேசன்துறை தேர்தல் முடிவுகள் பற்றி என்ன கூறுவீர்?

— தி. அமுதமலர் - யாழ்.

ப: தேர்தல் என்பது ஆளும் வர்க்கம் பிரிந்து நின்று மக்கள் வோட்டுக்கு மதிப்பிருப்பதாகக் காட்டி நடாத்தும் திருவிழாவாகும். பாராளுமன்றத்தேர்தல் மூலம் மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்கத்தக்க பெரிய மாற்றங்கள் எதையும் கொண்டுவரமுடியாது. மக்களின் வெறுப்புகள் தேர்தல் மூலம் திசை திருப்பப்படுகிறது. விடிவுக்கு வழிகாட்டப்படவில்லை. இத்தேர்தல் மயக்கத்தில் புரட்சிகர இயக்கங்கள் என்று தம்மைக் கூறிக்கொள்வோரும் சிலவேளைகளில் அறிக்கைகள் விடுத்து தம்மை அம்பலப்படுத்திக் கொள்கின்றனர். தேர்தலை நம்பும் அரசியல் சறுக்கு மரத்தில் ஏற முனைவது போன்றதாகும்.

கே: தேசிய முதலாளித்துவம் வளர்சியடைந்தே சர்வதேச முதலாளித்துவத்துடன் இணைந்துகொள்கிறது என்கிறேன், நீங்கள் என்ன கூறுவீர்கள்?

— செ. மூத்து - கொழும்பு.

ப; தேசிய முதலாளித்துவம் வளர்ச்சியடைந்து ஒரு கட்டத்தில் சர்வதேச முதலாளித்துவத்துடன் ஐக்கியப்படுவது என்பது உண்மையே. முதலாளித்துவ, ஏகாதிபத்திய மூலதனம் உள்நாட்டில் ஏற்கெனவே வேரூன்றியிருக்கும்போது "தேசிய முதலாளித்துவம் நிலைக்க, வளர்ச்சியடைய முடியுமா என்பது கேள்விக்குரியதாகும் இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் டாட்டா, பிர்லா, கோயங்கா போன்ற தேசிய முதலாளிகளும் வெளிநாட்டுப் பண்ட இறக்குமதிகளை எதிர்த்து, இறக்குமதிப் புடவைகளை தெருவில் போட்டுக் கொளுத்துவதில் முன்னின்றனர். சுதந்திரம் பெற்றதும் அவர்கள் பிற நாட்டு மூலதனங்களுடன் இணைந்து தரகு முதலாளிகளாகி விட்டனர். இன்று இந்தியா ஏகாதிபத்திய சமூக ஏகாதிபத்திய



முதலாளித்துவ நாடுகளின் சுரண்டல் களமாகவும் சந்தையாகியும் ஆகிவிட்டது. தேய்ந்து வருபவர் பலம் குன்றிய, பிறநாட்டு மூலதனத்துடன் இணைய முடியாத, பணக்கார தேசிய முதலாளிகளாவர். இதே நிலையே இலங்கைக்கும் ஏற்பட்டு வருகிறது.

கே: தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர் ஓர வஞ்சமாக ஒதுக்கப்படுவது நீதியாகுமா?

— த. குமரையா — கொழும்பு.

ப: இது அநீதியே. ஆளும் வர்க்கமே இதைச் செய்கிறது. இதன் மூலம் தமிழ் மாணவர் ஒரு தொகையினர் பட்டப் படிப்பிற்குச் செல்ல முடியாது ஒதுக்கப்படும்போது ஆளும் வர்க்கம் சிங்கள மாணவர்களையும் ஏமாற்றுகிறது; தமிழ் மாணவர் 100 — 200 பேரை தடை செய்து அதே தொகையான சிங்கள மாணவருக்கு வாய்ப்புத்தந்துள்ளோம் என்று கூறி சிங்கள மக்களையே ஏமாற்றுகிறது. பட்டப்படிப்புக்கு தகுதி பெற்றவர் எனக்கண்ட 15,500 மாணவர்களில் இவ்வாண்டு 3500 பேருக்கு மட்டுமே பட்டப் படிப்புக்கு வாய்ப்பு அளிப்பட்டுள்ளது. ஏறக்குறைய 7000 தகுதி பெற்ற சிங்கள மாணவர்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. இந் நிலையில் 100 — 200 தமிழ் மாணவர் இடங்களை சிங்கள மாணவருக்குத் தந்து இரு பகுதியினரையும் ஏமாற்றித் திருப்திப்படுத்துவது சிறு பிள்ளைத்தனமா? ஓரவஞ்சமா? தந்திரோபாயமா? வகுப்புவாதமா? முதலாளித்துவ வர்க்கசுபாவமா? எல்லாமே ஒன்று திரண்டதா? (குமரன்43. 22ம் பக்க கட்டுரையையும் பார்க்க)

கே: முதலாளித்துவம் எதற்காக பத்திரிகைகள், சஞ்சிகைகள், கலை. இலக்கியங்களிலெல்லாம் ஆபாச உருவங்களுக்கும் பாலுறவுக் காட்சிகளுக்கும் அதிக முக்கியத்துவமளிக்கிறது?

— க. தாகரத்தினம், மட்டுநகர்.

ப: இவற்றின்மூலம் ஏகாதிபத்தியமும், முதலாளித்துவமும் தமது இழிந்த கலாசாரத்தை அம்பலப்படுத்துகின்றன. பாலுறவு என்பது மனித வாழ்வுடன் இணைந்த ஒரு சிறு அம்சமாகும். முதலாளித்துவம் ஆண், பெண்களின் குடும்ப உறவிலிருந்து 'பாலுறவு' என்ற 'செயலை – செய்கையை' மட்டும் தனியே பிரித்தெடுத்து அதற்கு அதீத முக்கியத்துவம் அளித்து, அதை ஓர் லாபம் தரும் விற்பனைப் பொருளாக்கி விடுவதையே இன்று காண்கிறோம். அதன் மூலம் தன் சந்தைக் கலாச்சாரத்தையும் வெளிப்படுத்திக் கொள்கிறது. தொழிலாள, விவசாயிகள் இவற்றைப் பார்த்து அருசைப் படுகின்றனர்; என்றோ ஒரு நாள் இந்த இத்துப்போன முதலாளித்துவ கலாசாரத்தை அழித்தே தீருவர். இது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தன் கருணை – ஒரு புதிய திருப்பம்

— தியாகு —

நடிகர் ஒன்றியம் 7.2.75ல் கொழும்பு லும்பினி மேடையில் 'கந்தன் கருணை' கூத்துப்பாணி இசை நாடகத்தை புது மெருகூட்டி மேடையேற்றியது. காத்தான் கூத்து இசையில் அமைந்து பெரும்பாலும் யாழ். குடாநாட்டிலும் ஓரளவு இலங்கையின் பிற பகுதியிலும் மேடையேறி புதியதோர் தாக்கத்தை முன்னர் இந்நாடகம் ஏற்படுத்தியது. காத்தான் கூத்து இசையுடன் மட்டக்களப்பு கிராமிய ஆட்டமும் ஓரளவு கண்டிய நடனமும் இணைந்து தற்போது இந்நாடகம் உருப்பெற்றுள்ளது.

மாவிட்டபுரம் கோவிலில் தாழ்த்தப்பட்டவர் எனக் கூறப்படும் மக்கள் நுழைவதற்கு நடைபெற்ற போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டதே இவ் இசை நாடகமாகும்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் சாதிவெறி பற்றி நாரதர் முருகனுக்குக்கூறி, வள்ளியையும் நீர் கலைத்துவிட்டீரா? என்ற வினாவுடன் கதை ஆரம்பமாகிறது. முருகன் சமத்துவம் பேசி யாழ். கோவிலுக்கு நிலைமைகளைக் காண தெய்வயானையுடன் வருகிறார். கோவில் வாசலிலேயே 'நீ வேஷம் போட்ட எந்த ஊர் கந்தன்?' என்று உயர்சாதியினர் வினவி கோவிலுள் நுழையாது தடுக்கின்றனர். கோபமடைந்த முருகன் தன் வேலாயுதத்தை போராடிக்கொண்டிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களிடம் கொடுத்துவிடுகிறார். இவ் இசைநாடகம் நூலாகவும் வெளிவந்துள்ளதை யாவரும் அறிவர்.

தற்போதைய இசை நாடகத்தில் 13 பேர் நடிக்கின்றனர். ஐவர் தாழ்த்தப்பட்டவர்களைப் பிரதிபலிக்கும் பக்தர்களாகவும் மற்றும் மூவர் முருகன், தெய்வானை, நாரதர் ஆவர். யாவரும் மேடையில் நிற்க அவ்வப்போது உரையாடல் மூலமும் அசைவு மூலமும் கதையை நகர்த்துபவர்கள் மேடையில் ஒளி பெறுகின்றனர்.

சாதி என்பது நிலவுடைமையில் சுரண்டலுக்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும். இக்கருத்து சாதிப் போராட்டங்கள் பற்றிய கலை, இலக்கியங்களில் தொனிக்கவேண்டியது மிக முக்கியமாகும். அடுத்தது சுரண்டப்படும் வர்க்கத்திற்கு கோவிலுள் நுழையும் போராட்டம் அவசியமா? என்பதாகும். இந்த இரண்டுக்கும் விடையளிக்கும் முகமாக இக்கூத்து நாடகம் மெருகூட்டப்பட்டிருப்பது தனிச்சிறப்பாகும்.

''மேல்சாதி மகனல்லோ நீதான் தம்பி'' என்று தாழ்த்தப்பட்டவர்களுடன் சேர்ந்து போராடும் உயர்சாதி மகனை வேளாளர் பிரிக்க முயலும்போது அவன் உழைக்கும் வர்க்கத்தோடு ஐக்கியப்பட்டு நிற்பதாகக் கூறுகிறான். கிராமிய வழக்கு மொழிகள் இவ்இசைநாடகத்தில் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கூத்து, இசை, அசைவுகள், பின்னணி ஓசைகள் யாவும் நன்கு நெறிப்படுத்தப்பட்டிருந்தன. கிராமிய கூத்து முறைகளை பாட்டாளி வர்க்க எழுச்சிக்கு எவ்வாறு பயன்படுத்தமுடியும் என்பதற்கு நல்லதோர் உதாரணமாக இவ்இசை நாடகம் அமைந்திருந்தது.

ஆரம்பம் சோர்வாகவும் சோகமாகவும் பக்தர்கள் வலுவிழந்தவர்களாகவும் அடிமைத்தன வாழ்வில் ஊறியவர்களாவும் தோன்றுகின்றனர். சிறிதுசிறிதாக அவர்களது உணர்வுகள் வலுப்பெறுகின்றன. இது அவர்களது வர்க்க உணர்வின் வளர்ச்சியைக் காட்டுகிறது. வேளாளர் எதிர்க்கின்றனர். 'வாசற்கதவு தாண்டிக் கோயிலுக்குள் சென்றிடுவோம்' என்று வர்க்க உணர்வு, வீர உணர்வு பெற்றவர்களாக பக்தர்கள் எழுகின்றனர்.

''பாவை சீவும் கையால் சாதிவெறிப் பேயினை நாம் சீவிடுவோம்'' என்று சீறுகின்றனர். வர்க்க உணர்வில் வளர்ச்சி பெற்று ஆயுதம் ஏந்தும் நிலைக்கு வந்தமையை, தாழ்த்தப்பட்டவர்களின் உணர்வின் வளர்ச்சியோடு சிறப்பாக இந்நாடகத்தில் காட்டப்பட்டுள்ளது. இறுதியில் முருகன் போராட்டத்தைத் தொடர்வதற்காக தன் வேல் ஆயுதத்தை பக்தர்களிடம் கொடுப்பதாகவே இருந்தது. 'சங்கரன் தான் தந்த சக்திவேலை — இன்றே சமத்துவம் காண்பதற்கே தந்துவிட்டேன்' என்றே முருகன் பாடுவதாக நாடக நூலில் உள்ளது. [முருகன் பக்தரிடம் தன் வேலைக் கொடுத்ததும் அடியார்கள் எல்லோர் கைகளிலும் வேல்கள் மின்னுகின்றன — அடியார்கள் வேல்களை தாங்கிய வண்ணம் ஆனந்தக் கூத்தாடுகின்றனர்]. இவ்வாறு கந்தன் கருணை இசை நாடக நூலில் நாடகக்குறிப்பும் கூறப்பட்டுள்ளது.

ஆயினும் இந்த நாடகம் ஒரு புதிய திருப்பமாகும். முருகன் 'கந்த சத்தியைத் தந்தேன்' என்று தன் சக்தியையே வழங்குகிறார். வேல் ஆயுதத்தை கொடுக்கவில்லை. இத்திருப்பம் என்ன கருத்தை, முடிவைக் கூறுகிறது என்பது தெளிவாகவில்லை. ஆயுதம் ஏந்த அவர்கள் தகுதி பெறவில்லையா? பெருந்தினால் 'கந்த சக்தி' மட்டும் அவர்களுக்கு அளிக்கப்பட்டதா? கலையழகோடு தற்போது மேடையேற்றப்பட்ட இக்கூத்து நாடகம் இப்புதிய மயக்கத்தை ஏற்படுத்தி நிற்பது ஒரு புதிய திருப்பம், குறைபாடாகத் தோன்றுகிறது.

எவ்வேளை சுரண்டப்படும் வர்க்கம் ஆயுதம் ஏந்தி முன்னேற வேண்டும் என்பதை மாஓ தெளிவாகக் கூறியுள்ளார்: மக்கள் விழிப்புறாதபோது நாம் போரிட ஆயுதம் ஏந்தி தாக்குதலில் இறங்க முயல்வது தீவிரவாதம்; மக்கள் ஆயுதம் ஏந்தி முன்னேறக் கோரும்போது தடுப்பது வலதுசாரி சந்தர்ப்பவாதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயக்கங்கள் தீரட்டும்!

— வரதபாக்கியான் —

''வேலணை''க்கு அப்பாலும் எழுந்து செல்ல
விருத்தெறியாத் தத்துவத்தைச் செபம் செய்கின்ற
பாலகர்கள் சிற்சிலபேர், பகவத்கீதைப்
பக்கமதில் விடிவென்பார், சமய மார்க்கம்
காலமதை வெல்லுமென ''மெய்யுள்'' செய்வார்
கார்ல்மாக்சின் தத்துவத்தைப் பழமையென்பார்
ஓலமிடும் இவர்களது குரல்கள் எல்லாம்
உழைப்பவரின் காதுகளை ஒன்றும் செய்யா.

புராணமதில் வருகின்ற சூரன்போல
புதுப்புதிய வேஷமதைச் சுரண்டும் வர்க்கம்
திராணியற்றுப் போம்பொழுது எடுத்துக்கொள்ளும்
திகைக்காதீர், 'மெய்முதலும்' அதுபோலொன்று
குரானதிலும் மேற்கோள்கள் எடுத்துக் காட்டும்
குழிபறிக்கக் கீதையிலும் விளக்கம் கூறும்
புராணமதம் சுரண்டலர்க்குக் கவசம் போடும்
புதிய இந்த 'மெய்முதலோ' காவல்காக்கும்

'சத்தியத்தின்' காவலர்கள் எமக்கு வேண்டாம்
'சனிவாதம்' சாத்திரங்கள், வேதம் மூடம்
சொத்துமுறை, தனியுடைமை, சுரண்டும் வேலி
சுத்தமெனும் கலைவாதம் போலி வேஷம்
இத்தரையில் உழைப்பவர்க்கே உரிமை வேண்டும்
இதைத்தடுக்க ''மெய்முதல்கள்' எதிராய் வந்தால்
பத்துமுறை, பத்தென்ன நூறாய், நூறாய்
பலதடவை என்கவிதை நெருப்பைக் கக்கும்.

நல்லசிவம், உன்மனங்கள் பேசும் பேச்சு
நாற்றமெழும் தனிமனிதப் புலம்பற்பேச்சு
வெல்லவரும் உழைப்பவரை அணைகள் போட்டு
விடிபொழுதைத் தள்ளிவிடும் போலிப் பேச்சு
புள்ளியென ஈழமதிற் தெரியும், வர்க்கப்
புரட்சியினை குழப்பிவிடும், சீ. ஐ. ஏ.யின்
உள்ளமதைச் சொல்வதற்கு உலகமெங்கும்
உருப்பெற்ற சதிப்பேச்சு, வெட்டிப்பேச்சு

'பூதானம்', சிலநேரம் 'சிரமதானம்'
புலிவதிலும் அழியாது சுரண்டல்வேலி
ஆதாரம் பலவுண்டு, அகிம்சை வந்த
அங்கேதான் தோன்றியது 'நக்சல்பாரி'
சோதாக்கள் பிறந்திட்ட மண்ணிற்தானே
தோன்றியது 'வெண்மணியும்', 'தெலுங்கானா'வும்
போதாதா ஆதாரம் மயக்கம் தீர
பிறக்கின்ற யுகமில்லை சிவப்பாய் மாற

'புங்கை நகர்' வீதினிலே உங்கள் சத்தம்
'போர்ப்பறை'யாய் ஒலித்தாலும் உழைக்கும் மக்கள்
எங்களது வழியினிற் தான் மயக்கம் தீர்ப்பார்
ஏனெனிலோ புதியயுகம் பிறக்கச் செய்யும்
செங்கொடிகள் எங்களது கரத்தே யுண்டு
செகம் சிவக்கச் செய்வதற்கு மாசேதுங்கின்
சிந்தனைகள் எங்களிடம் நிறைய உண்டு
சீக்கிரமாய் ஈழமதின் மயக்கம் தீரும்.

(27.1.75 புங்குடுதீவு இலக்கியவிழா கவியரங்கின்
தலைமையுரையின் ஒருபகுதி)

# குடும்பத்திட்டமும் கருத்தடையும்

— மாதவன் —

[பிரீதி, நிரோத், பிற கருத்தடைச் சாதனங்கள், குடும்பத்திட்டம், அளவானகுடும்பம், சனத்தொகைபற்றிய உணர்வு, கருச்சிதைவு ஆகியன பற்றி சில ஆண்டுகளாக எம் நாட்டிலும் பரவலாகப் பேசப்பட்டுவருகிறது; ரேடியோ, பத்திரிகைகளிலெல்லாம் விளம்பரப்படுத்தப்படுகிறது. இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு முன்னரே இத்தகைய விளம்பரங்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. ஆண்களுக்கும், தாய்மாருக்கும் பரிசுகள் வழங்கி கட்டுப்படுத்தியும் சத்திர சிகிச்சைமூலமும் கருத்தடைகள் செய்யப்படுகின்றன. கருச்சிதைவை சட்டபூர்வமாக்குவது பற்றியும் தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறது. பின்தங்கிய மூன்றாவது உலக நாடுகளிலெல்லாம் இந்நிலையே நிலவிவருகிறது.

ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளின் சுரண்டற் பிடியில் அகப்பட்டு, இன்று அவர்கள் எமது எஜமானர்களாக எம் விடிவுக்குக் கூறப்படும் வழிகளையெல்லாம் அவர்களது தரகர்களான ஆளும்வர்க்கம் குருட்டுப்போக்காக எம் மக்கள்மேல் திணிக்கின்றனர்.

எம் நாட்டு மக்கள் அறியாமையில் வாழ்வதாகவும் தாம் எம் மக்கள் ஞானஒளிபெற உதவுவதாகவும், கிறிஸ்து மதத்தைப் பரப்பியதுபோல எண்ணிக்கொள்கின்றனர்.

மல்தூசியனின் மடமையை இன்று சீனு, ரஷ்யா போன்ற நாடுகள் நிரூபித்துவிட்டன. ஆயினும் முதலாளித்துவ பொருளாதார நிபுணர்கள் அவனது கோட்பாடுகளை விட்டதாக இல்லை.

மார்க்ஸிய கண்ணோட்டத்தின்படி உற்பத்தி உறவுகளை முன்வைத்து இப்பிரச்சினைகள்பற்றி ஆராயும்போது பல உண்மைகள் தெளிவாகுவதைக் காணலாம். கருத்தடைச் சாதனங்களை பின்தங்கிய நாடுகளில் சந்தைப்படுத்துவதே அவர்களது முக்கிய நோக்கம் என்பது மட்டுமல்ல அவர்களது அறியாமையும் தெரியவரும்.]

**அடிமைச் சமுதாயம்:**

அடிமைச்சமுதாயத்தில் குடும்பக்கட்டுப்பாடு என்பது இருக்கவில்லை. நல்ல ரக இன விருத்திக்கு சிறந்த ரக காளைமாட்டை வளர்த்து சினைபடுத்தப்படவேண்டும் என்பதை அன்றே அறிந்திருந்தனர்போலும். ஆண் அடிமைகளையும் பெண் அடிமைகளையும் ரோமாபுரியில் விரும்பியவாறெல்லாம் பாலுறவுகொள்ளாது தடுத்தனர். ஆடு மாடு பட்டிப் பெருக்கம்போல நல்ல ரக இனப்பெருக்கத்திலும் கவனம் செலுத்தினர். கட்டிளங்காளைகளை காளைமாடுகள்போல தனியே வளர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை மட்டுமே பெண்களுடன் பாலுறவு கொள்ளச்செய்து எஜமானர்கள் தமது அடிமை உழைப்புக்கு அடிமைகளையும் பட்டியாகப் பெருக்கினர். பாலுறவு கொள்வதைக்கூட காளைமாடுகளைச் சினைப்படுத்தப் பயன்படுத்துவதுபோலவே எஜமானின் மேற்பார்வையில் பெண்களை நிரைப்படுத்திவிட்டு கட்டிளங்காளையர்களை பாலுறவுகொள்ளச்செய்து சினைப்படுத்தினர். எஜமானருக்கு உழைப்பதற்கு அடிமைப் பெருக்கம் அத்தியாவசியமாயிருந்தது. அதாவது உற்பத்தி உறவையொட்டி கருத்தடைக் கட்டுப்பாடு எதற்குமே அவசியமாயிருக்கவில்லை. அடிமைப்பெருக்கம் எஜமானருக்கு செல்வப் பெருக்கமாயிருந்தது.

நிலவுடைமைச் சமுதாயம் :

குடும்பமே உற்பத்திக் கூறாக இருந்தது. முதலாளித்துவத்தில் உள்ளது போன்று குறிப்பிட்ட வருமானத்தில் வாழவேண்டிய கட்டுப்பாடு கிடையாது. குடும்பப் பெருக்கம் உற்பத்திப் பெருக்கத்திற்கு அவசியமாயிருந்தது. நிலப்பிரபுவுக்கும் பண்ணையடிமைகள் பெருகுவது வாய்ப்பாகவேயிருந்தது. 'கர்ப்பம் என்பது உயிர், அதை அழிப்பது பாவம், தெய்வத்திற்கு எதிரான செயல்' என்ற மேல்மட்ட அமைப்புப் பிரசாரங்களும் நிலப்பிரபு வர்க்கத் தேவைகளையொட்டிப் பரப்பப்பட்டன. இன்றும் எம் நாட்டு மக்களிடை இக்கருத்துகள் ஆதிக்கம்பெற்றுள்ளன. கருச்சிதைவு செய்ய முயல்தலே தண்டனைக்குரிய குற்றமாகும். இங்கும் குடும்பம் உற்பத்திக் கூறாக விளங்கும். உற்பத்தி உறவுமுறையை ஒட்டியே கருத்தடை என்ற பேச்சே எழவில்லை. குழந்தை பெறுதல், வளர்த்தல், சமைத்தல் போன்றவை குடும்பப் பெண்களின் கடமைகளாகின. பெண் கர்ப்பமுற்றதும் அதோர் மிகவும் மகிழ்ச்சிகர செய்தியாகக் கொள்ளப்பட்டது. கர்ப்பமுற்றதும் பெண் தாயாக மதிக்கப்பட்டு அவளுக்குப் பிடித்தமான உணவுவகைகளை வழங்குதல், சீமந்தம், வளைகாப்பு போன்ற விழாக் கொண்டாடுதல் ஆகியன நிலவுடைமைச் சம்பிரதாயங்களாகும். (நிலவுடைமையையே பெரும்பாலும் பிரதிபலிக்கும் தமிழ் திரைப்படங்களில் இவற்றைக் காணலாம்.) குழந்தையில்லாத குடும்பத்தவர் மலடர்கள் என கேலியாகக் கருதப்பட்டு சமுதாய அந்தஸ்துக் குறைந்தவர்களாகவே கணிக்கப்பட்டனர்.

மீனவர், கம்மாளர், தச்சுத் தொழிலாளர், உடைமை விவசாயிகள் ஆகியவர் - தமக்கு வேண்டிய உற்பத்திக் கருவிகளை சொந்தமாக உடைய சிறுபண்ட உற்பத்தியாளரிடையேயும் மேற்கூறிய கருத்தே நிலவுகிறது. தனிக் குடும்பங்களே உற்பத்திக் கூறாக விளங்குவதால் குடும்பப்பெருக்கம் உற்பத்திப் பெருக்கத்திற்கு வாய்ப்பானது என்று கொள்வது இயல்பே. அதிக கரங்கள் என்றால் அதிக உழைப்பு என்பதே அவர்கள் கோட்பாடு.



முதலாளித்துவ சமுதாயம் :

கூலி உழைப்பு முறையை அடிப்படையாகக் கொண்டது. முதலாளித்துவத்தின் கட்டுப்பாடுகள், முறைகள் அழுத்தந்திருத்தமானவை. குறிப்பிட்ட நேரங்களில் ஒழுங்காக வேலைக்குச் சென்றுவருதல், வழங்கப்படும் கூலிக்குட்படவே வாழ்க்கைச் செலவை அடக்குதல் ஆகிய இரண்டும் முதலாளித்துவ கூலி உழைப்பு முறையின் முக்கிய கட்டுப்பாடுகளாகும்.

இதுதவிர முதலாளித்துவம் வளர்த்த பண்ட உற்பத்திப் பெருக்கத்தால் குடும்பங்களுக்கு அத்தியாவசியம் எனக் கருதும் நுகர்பண்டத் தேவைகளும் பெருகின. இதனால் பெண்களும் கூலி உழைப்பிற்குச் செல்லவேண்டி நேரிட்டது. முதலாளித்துவம் வளர்ச்சிபெற்ற மேல்நாடுகளில் குடும்பத்தலைவன் மட்டும் உழைத்து மனைவி பிள்ளைகளைப் பேணுவது என்பது இயலாத செயல் என்று கருதப்படுவது யாவரும் அறிந்ததே. வேலைக்குச் செல்லும் வேளைகளில் குழந்தைகளைப் பராமரிப்பதே பெரிய செலவாகிறது. 3, 4 குழந்தைகளுக்கு மேற்பட நேரின் மனைவி வேலைக்குச் செல்லமுடியாது போய்விடும் பிள்ளை மடுவங்களுக்காக செலவாகும் பணம் மனைவி உழைப்பதற்கும் சரியாகிவிடலாம். இத்தகைய உற்பத்தி உறவுகளினால் ஏற்படும் பிரச்சனைகளினால் குடும்பக்கட்டுப்பாடு அவசியமாகிறது. கருத்தடை முறைகளை தாமே தேடிக்கொள்கின்றனர். அரசு இப்பிரச்சாரத்தில் இறங்குவதில்லை. அதற்குமாறாக அதிக பிள்ளைகளைப் பெறுபவர்களுக்கு வசதிகள், சலுகைகள் வழங்கி ஊக்குவிக்கிறது. கருத்தடைச் சாதனங்கள் பற்றிய பிரச்சாரமே இந்நாடுகளில் கிடையாது.

முதலாளித்துவ நாடுகளில் கர்ப்பமுற்ற பெண் குறைவாகவே மதிக்கப்படுகிறாள். தன் தாய்மைக்கோலத்தை அவலட்சணமாகவே கருதுகிறாள்; மற்றவர் பரிகசிப்பார்கள் என அஞ்சுகிறாள். கர்ப்பமுற்ற காலம், பிள்ளைப்பெறும் காலத்தில் உழைப்பைப் பெறமுடியாது என முதலாளியே கருதுகிறான்; இதனால் குறைந்த கூலி வழங்குகிறான்; சில தொழில்களில் கர்ப்பமுற்றதும் கூலி உழைப்பையே பெண்கள் விட்டுவிட நேரிடுகிறது.

பின்தங்கிய நாடுகளில் மட்டும் கருத்தடைப் பிரசாரங்கள் ஏன் செய்யப்படுகின்றன?

ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகள் மூன்றாவது உலக நாட்டு வளங்களை சூறையாடுவதையே இன்றும் தொழிலாகக் கொண்டுள்ளன. காலனியாக ஆளும் காலத்திலிருந்தே அந்நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை பற்றி அவர்கள் சிரத்தையெடுத்ததில்லை. காலனி நாடுகளிலெல்லாம் அவர்கள் விட்டுச்சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லாம் உணவுப்பற்றுக்குறையேயாகும். இன்று, 'உங்கள் குடிசனம் நாட்டுவளத்திற்கு மேலாக அத்துமீறிப் பெருகுகிறது; கட்டுப்படுத்துங்கள்' என்று அந்நாட்டுப் பொருளாதார நிபுணர்கள் அறிவுரை கூறுகின்றனர். இதற்குக் காரணங்கள் என்ன?

(1) தம் நாட்டு கருத்தடைச் சாதன கைத்தொழில் உற்பத்திக்கு எம் நாட்டைச் சந்தையாக்குவதா? (2) தொடர்ந்து எம் நாட்டு மூலவளங்களை அபகரிப்பதா? (3) அவர்களது அறியாமையா?

குடிசனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதே பின்தங்கிய நாடுகளுக்கு ஒரே வழி என்று கூறுவது வெறும் ஏமாற்று மட்டுமல்ல முதலாளித்துவத்தின் இயலாமையையும் காட்டிநிற்கிறது.

இலங்கை போன்ற பின்தங்கிய நாடுகளில் குடிசன வளர்ச்சி பின்வருமாறு மாற்றமடைகிறது :

(1) கூடிய கர்ப்பம் / கூடிய குழந்தை மரணம்

(2) கூடிய கர்ப்பம் / குறைந்த குழந்தை மரணம்

(3) குறைந்த கர்ப்பம் / குறைந்த குழந்தை மரணம்.

இலங்கையில் 1948இன் முன் (1) நிலையும், 1948ன் பின் (2)ம், 1971ன் பின் (3) நிலையும் அடைந்துள்ளது. 1971ம் ஆண்டு மத்திய வங்கியின் அறிக்கைப்படி 2.2 ஆக வளர்ந்த குடிசனம் 1973ல் 1.7 ஆக வீழ்ச்சியடைந்தது. அவ்வேளை இன்று நடைபெறுவது போன்ற பிரீதி பிரச்சாரம் இருக்கவில்லை. காரணம் பெரும்பாலான மக்கள் (பெண்களும்) கூலி உழைப்பாளராக மாறிவருவதேயாகும். இதனால் திருமணம் செய்யும் வயதும் உயர்ந்துள்ளது. 1953ல் 15-24 வயதிற்குள் திருமணம் செய்த பெண்கள் தொகை 46% ஆக இருந்தது; 1971ல் 27% வீதமாக குறைந்துள்ளது.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் கருத்தடை சாதனங்கள் பற்றிய விளம்பரங்கள் அரசின் ஆதரவுடனேயே மிகவும் மோசமான போக்கில் எம் நாட்டுப் பண்பாடுகளுக்கு எதிர்மாறான முறைகளில் செய்யப்படுகின்றன. இவை வெளிப்படையாக இரு அம்சங்களைக் காட்டிநிற்கின்றன : (1) எம் நாடுகளில் நிலவுடைமை உற்பத்தி முறையே இன்றும் ஆதிக்கத்தில் உள்ளது (முதலாளித்துவ உற்பத்தி முறையில் இத்தகைய பிரசாரம் அத்தியாவசியமற்றதாகிவிடும்). (2) தரகு முதலாளித்துவத்தின் செல்வாக்கும் ஆதிக்கமும் வளர்ந்து வருவது. (எம் நாட்டு மக்களது ஒழுக்கம், பண்பாடு முறையின்படி தவறானது எனக் கருதுவதை வலிந்து பிரசாரம் செய்வது. இதை தரகு முதலாளி வர்க்கத்தால் மட்டுமே செய்யமுடியும்.)



முதலாளித்துவ உற்பத்திமுறை நிலவும் பகுதிகளில் குடும்பக் கட்டுப்பாடு இயல்பாகவே அமைகிறது என்பதை எம் நாட்டிலேயே காணலாம். கொழும்பிலும் பெருந்தோட்டப் பகுதிகளிலும் குடும்பப் பெருக்கம் மற்றைய பகுதிகளிலும் பார்க்க குறைவாகவே உள்ளன. அறியாமையே குடும்பப் பெருக்கத்திற்குக் காரணம் என்பது முற்றும் தவறான கோட்பாடாகும்.

1963, 1971 குடிசன புள்ளிவிபரங்களை ஒப்பிடும்போதும் கண்டி, நுவரெலியா, மாத்தளை, பதுளை, இரத்தினபுரி ஆகிய பெருந்தோட்டப் பகுதிகளில் குடிசன வளர்ச்சி ஏனைய பகுதிகளிலும் பார்க்கக்குறைவாகவே காணப்படுவதை அவதானிக்கலாம்.

உற்பத்தி உறவு, கூலி உழைப்பு முறையே உண்மைக் காரணமாகும். பெருந்தோட்டப்பகுதியே கல்வியறிவு மிகக்குறைந்த பகுதியாகும்.

கீழே குறிப்பிட்டுள்ள 1971க்குரிய புள்ளிவிபரங்கள் உண்மை நிலையைக் காட்டவல்லன :

| | கல்வியறிவு % | ஒரு குடும்ப அளவு | கர்ப்பமடைவோர் 1000க்கு | குழந்தை மரணம் 1000க்கு |
|---|---|---|---|---|
| தேசிய சராசரி | 82 | 5.6 | 30.0 | 8.2 |
| பெருந்தோட்டப்பகுதி சராசரி | 61 | 3.3 | 25.4 | 11.2 |

நெருங்கிய வசிப்பிடமும் பெண்களில் பெரும்பகுதியினர் உழைப்பதுவும் பெருந்தோட்டப் பகுதியிலேதான். சராசரி 3.3 நபர்கொண்ட சிறிய குடும்பமும் குறைந்த கூலி உழைப்பும் (தேசிய சராசரி கூலி விகிதத்தில் $\frac{1}{3}$ மட்டுமே இவர்களுக்கு வழங்கப்படுகிறது) குறைந்த குழந்தைகள் பெற்று (25.4) கூடிய தொகையைப் பறிகொடுப்பவரும் (11.2) தோட்டத் தொழிலாளர்களேயாவர்.

சோஷலிச சமுதாயம் :

உற்பத்தி உறவு, சமூக உடைமை சமூக உற்பத்தி உறவாக மாறுகிறது. தனிக்குடும்ப உற்பத்தி உறவுகளுக்காகவோ கூலி உழைப்பு தேவையையொட்டியோ குடும்பப் பெருக்கம், கட்டுப்பாடு என்ற முறைகள் மறைகின்றன. சமுதாய உணர்வு, சமுதாயப் பொறுப்புணர்வு, தனிவாழ்வு, உணர்ச்சி நிறைவு ஆகியவை தலையெடுக்கின்றன. மக்கள் தாமாக, சுதந்திரமாகவே குடும்பங்களை விரும்பி அமைத்துக் கொள்ளுகின்றனர். பிள்ளைகளை வளர்ப்பதுகூட சமுதாயப் பொறுப்பாகிவிடுகிறது. மனிதன் அனைத்திலும் சுதந்திரம் பெற ஆரம்பிக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூஷ்வா ஜனநாயகம் வழங்கும் பகட்டு உரிமைகள்

பிரதமர் இரு தடவைகளில் எம்மைக் கலந்தாலோசிக்காது செய லாற்றியது கவலை தருகிறது.

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் நவம்பர் 16ல் நடாத்த இருந்த ஆண்டு விழாவை ஊரடங்குச்சட்டம் போட்டு பிரதமர் தடை செய்தார். இச்சம்பவத்தின் முன்னர் ஐக்கிய முன்னணிக் கட்சிகளிடை கலந்தாலோசனை நடந்திருப்பின் இது சம்பவித்திருக்காது. நீண்ட காலமாக மக்களுக்குக்கிடைத்து வந்த சிவில் உரிமைகள் பாதிக்கப் பட்டுள்ளன- முதலாளித்துவக் கட்சிகள் தங்கள் கொள்கைகளை நடை முறைப்படுத்த அரசு யந்திரத்திலேயே நம்பியிருக்கின்றன. மக்கள் மறு தேர்தல்வரை பார்வையாளர்களாக ஒதுக்கப்படுகின்றனர்.

கட்சி அமைப்பும் சுயேச்சையாளர் குழுக்களுக்கு பயிற்சி அளிப் பதும் தடைசெய்யப்பட்டது மற்றோர் ஐக்கிய முன்னணிக்கட்சிகளு டன் கலந்தாலோசிக்காது செயலாற்றிய நிகழ்ச்சியாகும். சுயேச்சைக் குழுக்கள் பயிற்சி பெறுவது, இந்நாட்டில் என்றுமில்லாதது, திடீரென தோன்றிய அரை இராணுவப் பயிற்சி முறை என்ற கருத்தை இது கொடுத்துள்ளது. தொழிற்சங்கங்களும் இளைஞர் இயக்கங்களும் நீண்டகாலமாகவே சீருடை அணிந்து பயிற்சி பெறுவது. அணி வகுப்பது மக்கள் இயக்கங்கள் செயல்படும் காலத்திலிருந்தே தொடங்கப் பட்டவையாகும். புரட்சிகர அரசியல் இயக்கங்கள் தோன்ற முன்னர் ஏ. ஈ. குணசிங்கா தொழிற்கட்சியை அமைத்த காலத்திலிருந்தே நடந்து வருபவையாகும்:—பெர்னாட்சொய்சா செயலாளர்-சமசமாஜக் கட்சி அறிக்கை — 10-1-75.

* * *

ஊர்வலத்தடையை மீறுவதாக சில பகுதியினர் முட்டாள்தன மாக தீர்மானிக்காதிருந்தால் ஊரடங்குச் சட்டம் போடவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கமாட்டாது.

எம்மை 1970 பொதுத்தேர்தலின்போது ஆதரித்த மக்கள் விடு தலை முன்னணியினரே 1971ல் தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்து விளை விக்க முயன்றதை நாம் மறந்துவிட முடியாது.

நான் பிரதமர் பதவி வகிக்கும் வரையும் நாட்டின் சுதந்திரம், தேசிய பாதுகாப்பு ஆகியவற்றிற்கு நானே பொறுப்பாளி. இதை



ஜனநாயகம். சோஷலிசம் ஆகிய இரு குறிக்கோள்களையும் முன் வைத்து நானே கவனித்து வருகிறேன். — பிரதமர் அறிக்கை 12-1-74.

* * *

தேர்தல்வாக்குறுதிகள் பெரும்பான்மைபெற்ற எந்தக் கட்சி யையோ, அரசையோ கட்டுப்படுத்துவனவல்ல. ஏனெனில் தேர்தலில் வெற்றிபெற்றவர்களை திரும்ப அழைக்க மக்களுக்கு வாய்ப்பு அளிக்கப் படுவதில்லை. பாராளுமன்றத்தில் ஆதிக்கம் தேர்தெடுக்கப்பட்ட உறுப் பினரிடம் கிடையாது. அமைச்சரவையிடமே உள்ளது, இவர்கள் ஆளும் வர்க்கத்தின் பாதுகாவலரான நம்பிக்கைக்குரிய அதிகாரிகளிலேயே தங்கியுள்ளனர். இவ்வதிகாரிகள் தேர்தலில் நிற்கவேண்டியதில்லை. அமைச்சரவையுள்ளேயும் உள் அமைச்சரவையாக மற்றோர் முன்னோடி யான சில அமைச்சர்கள் இருப்பர். நெருக்கடிகள் ஏற்படும்போது வங்கி அதிபர்கள், ஏகபோக முதலாளிகளை கலந்து பேசியே இவர்கள் முக்கிய தீர்மானங்களை எடுப்பர். — தொம்சன்

* * *

நவீன அரசுகளின் அடிப்படைச்சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நிரு வாகம், கூட்டம் கூடும் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் அல்லது 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' ஆகியவை அனைத்திலும் பூஷ்வா ஜனநாயகத்தின் கபடத்திற்குரிய சான்றுகளை நேர்மையான, வர்க்க உணர்வுகொண்ட தொழிலாளி அறிந்திருக்கிறான்.

சுரண்டப்பட்ட வர்க்கம் அடிமைத்தனத்திலிருந்து விடுபடும் முக மாக நடவடிக்கை எடுக்க, அதை பொதுச்சட்ட ஒழுங்கை மீறுவதாக குற்றம் சுமத்தி, மாஷல் சட்டம் பிரகடனப்படுத்தி, தொழிலாளர்களுக்கு எதிராக இராணுவத்தை அனுப்புவதற்கேற்ற முறையாக பூஷ்வா வர்க்கம் அரசியலமைப்பில் இடம் வைத்துக்கொள்கிறது. இத்தகைய வசதிகள் ஏற்படுத்தாத அரசியலமைப்புக்கொண்ட பூஷ்வா ஜனநாய கம் எந்த ஒரு தனிப்பட்ட நாட்டிலும் கிடையாது. — லெனின்


15-7-1974இல் இருந்து

**'குமரன்' புதிய சந்தா விபரம்**

தனிப் பிரதி : 50 சதம்

ஆண்டுச் சந்தா : ரூ. 6/-

ஆங்காங்கே வரவழைத்து விநியோகிப்போருக்கு விசேஷ சலுகைகள் உண்டு. எழுதுக :

நிர்வாக ஆசிரியர், குமரன், 201, டாம் வீதி, கொழும்பு-12

தொலைபேசி : 21388




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனக் குடியரசின் புதிய அரசியலமைப்பு

— 'கலி' —

"புதிய ஜனநாயகப் புரட்சியின் மிகப் பெரு வெற்றியுடன் மக்கள் சீனக் குடியரசு உதயமாகியது; அத்துடன் சோஷலிசப் புரட்சியின் வரலாற்றுக் காலகட்டமும் பாட்டாளிகளின் சர்வாதிகாரமும் ஆரம்பித்தது. சீன மக்கள் ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு மேலாக நடாத்திய வீரப் போராட்டத்தின் வெற்றியே இதுவாகும். இறுதியில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் நடந்த மக்கள் புரட்சி யுத்தமே ஏகாதிபத்தியம், நிலவுடைமை, அதிகாரத்துவ முதலாளித்துவம் நடாத்திய பிற்போக்கு ஆட்சியை வீழ்த்தியது......"

இவ்வாறு மக்கள் சீனக் குடியரசின் 4வது தேசிய மக்கள் காங்கிரசினால் 17.1.75 ல் அங்கீகரிக்கப்பட்ட புதிய அரசியலமைப்புச் சட்டம் ஆரம்பமாகிறது. அதில் குறிப்பிடப்பட்ட முக்கிய சரத்துகளைக் கீழே தந்துள்ளோம் :

"சோஷலிச சமுதாயம் நீண்ட வரலாற்றுக் காலத்தை அடக்கும். இவ்வரலாற்றுக் காலகட்டம் முழுவதும் வர்க்கங்கள், வர்க்க முரண்பாடுகள், வர்க்கப் போராட்டங்கள் இருக்கவே செய்யும்."

× × ×

சர்வதேச அலுவல்களில் நாம் பாட்டாளியின் சர்வதேசியத்தை நிலைநாட்ட வேண்டும். சீனு என்றும் ஒரு வல்லரசாகாது.

× × ×

தொழிலாள, விவசாயிகளின் கூட்டமைப்பின் அடிப்படையில் தொழிலாள வர்க்கம் பாட்டாளியின் சர்வாதிகாரத்தை முன்நடத்தும் சோஷலிச அரசே சீனக் குடியரசாகும்.

× × ×

சீனக் குடியரசு பல தேசிய இனங்களைக்கொண்ட ஒரே ஐக்கிய அரசாகும். மாவட்ட தேசிய ஆட்சியுரிமை உள்ள பகுதிகள் யாவும் சீனக்குடியரசிலிருந்து அன்னியப்படுத்தப்படமுடியாத பகுதிகளாகும்.

× × ×



இன்றைய காலகட்டத்தில் சீனக்குடியரசில் உற்பத்திச் சாதனங்களில் இரு வகையான உடைமை உள்ளன. மக்கள் அனைவருக்கும் சொந்தமான சோஷலிச உடைமை, உழைக்கும் மக்களது சோஷலிச கூட்டு உடைமை.

× × ×

கிராமிய மக்கள்கம்யூன் அரசு நிருவாகத்தையும் பொருளாதார நிருவாகத்தையும் ஒன்றிணைக்கும் அமைப்பாகும்.

× × ×

சீனக் குடியரசு சோஷலிச கோட்பாடுகளான, "உழைக்காதவன் உண்ண உரிமைபெற மாட்டான்", "திறமைக்கேற்ற உழைப்பு, உழைப்பிற்கேற்ற பங்கு" என்பனவற்றைக் கடைப்பிடிக்கும்.

× × ×

கலாச்சாரம் உட்பட எல்லா மேல்மட்ட அமைப்பிலும் பூஷ்வா வர்க்கத்தின்மேல் பாட்டாளியே சர்வாதிகாரம் செலுத்தவேண்டும். கலாச்சாரம், கல்வி, கலை இலக்கியம், உடற்பயிற்சி, சுகாதாரப்பணிகள், விஞ்ஞான ஆய்வு அனைத்தும் பாட்டாளி வர்க்க அரசியலுக்கும், தொழிலாளர் விவசாயிகளுக்கும் போராளிகளுக்கும் சேவை செய்வதோடு உற்பத்தி உழைப்போடும் ஒன்றிணைய வேண்டும்.

× × ×

பெண்கள் ஆண்களோடு எல்லா வகையிலும் சமஉரிமை பெறுவர்; திருமணம். குடும்பம், தாய்-குழந்தையை அரசு பாதுகாக்கும்.

× × ×

பிரதேச புரட்சிக் கமிட்டி எல்லா மட்டத்திலும் பிரதேச காங்கிரசின் நிரந்தர அமைப்பாகும்; அதேவேளை எல்லா மட்டத்திலும் மக்களின் பிரதேச ஆட்சியும் அதன் பணியேயாகும்.

புரட்சிக் கமிட்டி தேர்தல்மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவர் உப-தலைவர், உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். இவர்களைத் திருப்பி அழைக்கவும் மக்கள் காங்கிரசுக்கு தேர்வதுபோல உரிமையுண்டு.

× × ×

சுப்ரீம் கோடு, எல்லா மட்டத்திலுமுள்ள பிரதேச மக்கள் கோடுகள், விசேட மக்கள் கோடுகள் நீதி வழங்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கும்.

கவிகரிப்பு வழக்குகளை விசாரிப்பதில் மக்கள்வழி பிரயோகப்படுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றுலக முக்கோண முரண்பாடுகள்

— பெருமாள் —

**மூன்றாவது உலகம்:**

காலனித்துவம், ஏகாதிபத்தியம், வல்லரசுகளின் கெடுபிடிகளுக்கு எதிராக போராடி தொடர்ந்து முன்னேறிவரும் உலகின் மிகப்பெரிய உந்து சக்தி மூன்றாவது உலக நாடுகளாகும்.

ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்காவுடன் மற்றும் சில பகுதிகளைக் கொண்ட 100க்கு மேற்பட்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மூன்றாவது உலக நாடுகளிடை அடங்கும். (சீனா, இந்தியா, இலங்கை, மத்திய கிழக்கு, ஆபிரிக்க நாடுகள் அனைத்தும்...) உலகின் 70% மேற்பட்ட சனத்தொகையுடைய 300 கோடி மக்கள் இங்கு வாழ்கின்றனர். இவர்கள் காலனித்துவம். ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறைக்குள்ளும் சுரண்டலின் கீழும் நீண்டகாலம் வாழ்ந்தவர்கள். இன்றும் இந்நாடுகள் ஆக்கிரமிப்பு, கட்டுப்பாடுகள், சதிவேலைகள், சுரண்டல் ஆகியவற்றிற்கு உட்பட்டுள்ளன. அதனால் தேசிய அபிவிருத்திக்கும் தமது விடிவுக்குமாக அடக்கு முறைகளை எதிர்த்துப் போராடும் புரட்சிகர எழுச்சியும் இவர்களிடமே உள்ளன.

**முதலாவது உலகம்:**

அமெரிக்கா, சோவியத்யூனியன் ஆகிய இரு நாடுகளுமே ஆதிக்கக் கெடுபிடி கொண்ட முதலாவது உலகமாகும்.

**இரண்டாவது உலகம்:**

வல்லரசுகளைக்கொண்ட இவ்விரு ஏகாதிபத்தியங்களுக்கும் மூன்றாவது உலக நாடுகளுக்குமிடையில் வாழும் அபிவிருத்தியடைந்த நாடுகளே இரண்டாவது உலக நாடுகளாகும். மேற்கு ஜெர்மனி, ஜப்பான், பிரான்சு, பிரிட்டன், இத்தாலி, கனடா, அவுஸ்திரேலியா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளே இரண்டாவது உலகமாகும்.

முதலாவது உலக நாடுகளான அமெரிக்கா—சோவியத் ரஷ்யாவிற்கும் இடையிலேயே முரண்பாடுகள் உள்ளன. இவை இரண்டிற்கும்-மூன்றாவது உலக நாடுகளுக்குமிடையில் முரண்பாடுகள் பகைமையாக உள்ளன. இரண்டாவது உலகநாடுகளுக்கும் - மூன்றாவது உலக நாடுகளுக்குமிடையில் முரண்பாடுகள் உள்ளன. முதலாவது - இரண்டாவது உலக நாடுகளிடையேயும் முரண்பாடுகள் உள்ளன. இவ்வாறாக முக்கோணமாக முரண்பாடுகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகச் சுரண்டலில் பெரும் பகுதியை எவர் அபகரிப்பது என்ற போட்டியே அமெரிக்காவிற்கும் சோவியத் ரஷ்யாவிற்கும் இடையில் உள்ள முரண்பாடாகும். இவர்களிடையுள்ள முரண்பாடுகள் பகைமையுடையதாக சில வேளைகளில் தோன்றியபோதும் நேச முரண்பாடாகவே பெரும்பாலும் தோன்றுகிறது. பகைமையாக மாறும்வேளை மூன்றாவது உலக யுத்தத்தை எதிர்பார்க்கலாம். மத்திய கிழக்கில் இந்நிலை தோன்றக்கூடிய சாத்தியங்கள் உள்ளன.

அமெரிக்காவிற்கும் அபிவிருத்தியடைந்த இரண்டாவது உலக நாடுகளிடையேயும் பெரும்பாலும் சிநேக முரண்பாடே நிலவி வருகிறது. 2 வது உலக நாடுகளுக்கு அமெரிக்காவே தலைமை தாங்குகிறது. இவர்களது உறவை நேச உறவாக காப்பதற்காக அமெரிக்கா அவ்வவ்வேளை புதுப்புது வழிகளைக் கையாள்கிறது. உதாரணமாக வியத்நாம் யுத்தத்தை முன்னடத்தும்போது யுத்த தளவாட உற்பத்தி ஓடர்களில் பெரும் பகுதியை யப்பான், மேற்கு ஜெர்மனி, பிரான்சு, பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு வழங்கியது. இந்நாட்டு முதலாளிகள் வட்டிகொண்ட கடனில் உற்பத்தி செய்து உதவி வழங்கினர். யுத்த காலத்தில் இவர்களிடை நேச உறவு நிலவியது. யுத்தம் முடிந்ததும் கடன்களை திருப்பித்தரும்படி 2 வது உலக நாடுகள் வற்புறுத்தின. அதுவே இன்று உலகப் பொருளாதார வீழ்ச்சியாக வடிவம் எடுத்துள்ளது; தங்கம், டாலர் வீழ்ச்சி மேற்கு ஜெர்மன் மார்க், ஜப்பான் ஜென்னின் எழுச்சி ஆகியனவாக இன்று பிரதிபலிக்கின்றன. 1,2வது உலக நாடுகளிடையே முரண்பாடுகள் முற்றி வருகின்றன. அமெரிக்க முதலாளிகள் தமது ஆதிக்கத்திலுள்ள மத்திய கிழக்கு எண்ணெயின் விலையை உயர்த்தி தற்காலிகமாக தமது நெருக்கடியைத் தளர்த்த முயல்கின்றன. இதன் மூலம் அமெரிக்க எண்ணெய் முதலாளிகள் முன்னரிலும் அதிக லாபம் தேடி வருகின்றனர். அமெரிக்க முதலாளிகள் உள்நாட்டிலேயே தம் நாட்டிற்குத் தேவையான பெரும் பகுதி மண்டி எண்ணெயை பெறுகின்றனர். இதன் விலையையும் உயர்த்தி உள்நாட்டிலேயே அதிக லாபம் திரட்ட முடிகிறது. இவ்விலையேற்றத்தால் அரபு நாடுகளும் ஓரளவு வாய்ப்புப் பெற்று வருகின்றனர் என்பதும் உண்மையே. ஈரான்

மன்னர் ஷா, சவுதி அரேபிய மன்னன் பெஷ்கள் ஆகியோர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து முற்றாக விடுபட்டு தாமே தமது எண்ணெய் விலையை 'ஒப்பெக்' (OPEC) நாடுகள் மூலம் தீர்மானிக்கின்றன என்று முழுமையாகக் கூறிவிட முடியாது. இது மீள ஆராய வேண்டிய விஷயமாகும். இந்நாடுகளில் மக்கள் ஆட்சியே இல்லை. பாசிச ஆட்சியும் அடக்கு முறைகளுமே நிலவுகின்றன. மக்கள் எதையும் தீர்மானிக்க முடியா நிலையிலேயே இன்றும் உள்ளனர்.

மூன்றாவது உலக நாடுகள் தம் காலில் தாமே நிற்பதன் மூலமே 1,2வது உலக நாடுகளின் சுரண்டல்களிலிருந்து தம்மைக்காப்பாற்ற முடியும். 1,2வது உலக நாடுகள் உதவியென்ற பெயரில் தமது மேலதிக உற்பத்திப்பண்டங்களையும் கனரக யந்திரங்களையும் எம் நாடுகளிடை தள்ளுகின்றன. இவற்றில் நம்பிக்கை வைத்திருக்கும்வரை எமக்கு விடிவே கிடையாது.

3வது உலக நாடுகளிலிருந்து மூல வளங்களை அபகரிப்பதே 1,2வது நாடுகளின் ஒரே கோட்பாடாகும். 3வது உலக நாடுகள் யாவும் ஐக்கியப்படுவதன் மூலம் 1,2வது நாடுகளை பணியவைக்க முடியும். எமக்கு 1,2வது உலக நாடுகளது உதவி அவசியம் என்று எண்ணுவதே தவறு. அவர்களுக்கே எமது உதவிகள் தேவை; அவர்களது யந்திரங்களுக்கு தீனிபோட எமது மூல வளங்கள் வேண்டும். இந்த உண்மையை உணர்ந்ததும் உலக வரலாற்று வளர்ச்சியின் மிகப்பெரும் உந்து சக்தி மூன்றாவது உலகநாடுகளே என்பது நிரூபணமாகும்.

## இனி, தூங்க முடியாது

நெல்லின் மணித் திரட்சி காண தவிக்கின்ற
செல்வா...!, ஓ...சில்வா, செயின் காக்கா உங்களைத்தான்!
வெள்ளாமை வட்டைக்குள் வியர்வை இறைத் திறைத்தே
செல்லாக் காசானோம், சீர் கெட்டோம், உண்மையிது!
அல்லாவா...? இல்லை யெனில் அம்முருகப் பெருமானா...?
இல்லையெனில் யாரெம்மை இந்நிலைக்கு ஆக்கியவர்?
சொல்லுங்கள்! உங்களைத்தான்...சொல்லுங்கள்!

கல்லான உளம் கொண்ட, நிலப்பிர புத்துவத்தின்
கள்ளர்களெல்லாம் எம்முழைப்பை உறிஞ்சியதால்
இல்லாராய்ப் போனோம்! ஏதுண்டு இழப்பதற்கு?
தொல்லை மிகவுண்டு, துயர்ச் சுமை உண்டு...
இல்லை; பிற இதனால் இனித் தூங்க முடியாது!

(பாலமுனை - பாறுக்)



# இலங்கையின் (தரகு) முதலாளித்துவ ஆளும் வர்க்கம் – 3

முன் இரு கட்டுரையிலும் அடிப்படை அமைப்பில் தரகு முதலாளித்துவத்தின் ஆதிக்கத்தை ஆராய்ந்தோம். முதலாவது கட்டுரையில் தனியார் துறையூடாக கூட்டுக் கம்பனிகள், சர்வதேசக் கம்பனிகள் ஆதிக்கம் பெற்றிருப்பதை கணக்கிட்டோம். இரண்டாவது கட்டுரையில் அரச முதலாளித்துவத்தினூடாக பிற நாட்டு ஆதிக்கம் வலுப்பெற்றிருப்பதைக் கண்டோம். மூலதனம் நுழையும்போது அவற்றோடு அந்நாடுகளின் மேல்மட்ட அமைப்புகளும் ஆதிக்கம் பெறுவது தவிர்க்க முடியாதது. அவை மூலதனத்தைப் பேணுவதும் மூலதனம் மேல்மட்ட அமைப்புகளைக் காப்பாற்றி வளர்ப்பதும் இயல்பாகின்றன. இக்கட்டுரையில் மேல்மட்ட அமைப்புகளின் ஆதிக்கம் பற்றி ஆராய்வோம்:

அரசியல் : பிரித்தானியர் தந்த 'ஜனநாயகம்' என்ற அரசியல் முறையையே நாம் இன்னும் கடைப்பிடித்து வருகிறோம். புதிய அரசியல் சட்டம்கூட அவர்களது பூஷ்வா ஜனநாயக கோட்பாடுகளை ஒட்டியதே. பேரவை நடைமுறைகள் யாவிலும் பிரித்தானிய பாராளுமன்ற ஒழுங்கு முறைகளே இன்றும் கடைப்பிடிக்கப்படுகின்றன. இவ் ஜனநாயகம் 51% மானவர் 49% மானவர்கள்மீது சர்வாதிகாரம் செலுத்துவதாகும். இதுதவிர ஐந்து ஆண்டுக்கு ஒரு தடவை வோட்டுப் போடுவதன்மூலம் சொத்துடையவரும் பாட்டாளிகளும் சமம் என்று பொய்மை பேசுகிறது.

சட்டம் : ரோமன் டச்சுச் சட்டம், ஆங்கிலேய சட்டம் இரண்டுமே இன்றும் ஆட்சிபுரிகின்றன. சொத்துரிமையில் தேசவழமை, கண்டியன் சட்டம் போன்றவை பிரதேசங்களின் வழமையைப் பின்பற்றியபோதும் முரண்பாடுகள் ஏற்படும் போதெல்லாம் ஆங்கிலேய சட்டமே முன்நிற்கும். நீதிமன்றங்கள், நடைமுறைகள் யாவும் மேல்நாட்டவரதே.

மதம் : புத்தமதம் புதிய அரசியல் அமைப்பில் முதலிடம் பெற்றபோதும் கிறிஸ்தவ மதத்தின் செல்வாக்கு முன்னிற்கவே செய்கிறது. இன்றும் கிறிஸ்மஸ் பண்டிகை, ஆங்கில புத்தாண்டு முதலிடம் பெறுகிறது.

கல்வி : பிரித்தானிய கல்வி முறைகள் 1970 வரை ஆதிக்கம் பெற்றிருந்தன. அதன் பின்னர் அமெரிக்க கல்விமுறை, பரீட்சைமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் புகுத்தப்பட்டு வருகின்றன. கைத்தொழில் வளர்ச்சி, கம்பியூட்டர் ஆதிக்கம் பெற்ற நாட்டு முறைகள் அரைக்காலனி, அரைப் பிரபுத்துவ நாடான இலங்கையில் திணிக்கப்படுகின்றன. விவசாய நாடான இலங்கைக்கு வேண்டிய கல்வி இன்றுவரை ஆதிக்கம் பெறவில்லை. (தரகு) முதலாளித்துவத்தின் தேவையை ஒட்டிய கூலி உழைப்புக்குத் தயாராக்கும் கல்வி முறையே இன்றும் ஆதிக்கம் பெற்றுள்ளது.

மொழி : சிங்களம், தமிழ் ஆகியன தேசிய மொழிகளாகக் கருதப்பட்டபோதும் ஆங்கிலத்தின் செல்வாக்கே முன்னிற்கிறது. ஆங்கில மொழி கட்டாய பாடமில்லை என பண்டாரநாயகா 1956ல் ஆட்சியில் வந்த காலத்தில் நடைமுறைப்படுத்த முயன்றார். தற்போது அவர் மனைவியார் பிரதமராகவுள்ள ஐக்கிய முன்னணி ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்கிவிட்டது. ஆங்கிலம் எமது எசமானர் மொழியாகிறது. சிங்களம், தமிழ் மட்டுமே தெரிந்தவர்கள் சமுதாய அந்தஸ்தில் இன்றும் குறைந்தவர்களே.

கலை இலக்கியம் : அமெரிக்க திரைப்படங்கள், ஆங்கில அமெரிக்க சஞ்சிகைகள், மொழிபெயர்ப்பு நூல்கள், மொழிபெயர்ப்பு நாடகங்கள் இன்றும் மொடலாகவும் எம் நாட்டில் முன்னிற்கின்றன. சிங்கள, தமிழ் கலை இலக்கியங்கள்கூட ஆங்கில கலை இலக்கிய கண்ணோட்டத்திலேயே ஆராயப்படுகின்றன; படைக்கப்படுகின்றன. எம் நாட்டு மரபுக்கே ஒவ்வாத 'பொப்' இசை அரசின் வழியாகவே வானொலி மூலமும் ஆதிக்கம்பெற்று வருகிறது. தரகு முதலாளித்துவ கலை, கலாசார வளர்ச்சியையே இவை காட்டிநிற்கின்றன.

நடை, உடை பாவனைகள் : ஆங்கில, அமெரிக்க முறைகளே மொடலாகக் கையாளப்படுகின்றன. ஓட்டல்கள், வீடுகள், தளபாடங்கள் யாவிலுமே அந்நாடுகளையே மொடலாகப் பின்பற்றுகிறோம். நுகர் பண்டத் தேவைகள் யாவும் அந்நாட்டவர் கைத்தொழிற் பண்டங்களேயாகும். உடையில்கூட அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் ஏற்படும் மாற்றங்கள் இங்கும் ஆளும் வர்க்கத்தவரால் மொடலாகக் கொள்ளப்படுகின்றன. 'மினி ஸ்கேட்' மறைந்து 'பெல்பொட்டம்' செல்வாக்குப் பெறுவதை காண்கிறோம். உற்பத்திஉறவை ஒட்டியே உடைகள் தயாரிக்கப்படுவதை முதலாளித்துவத்தில் எளிதில் காணலாம். உதாரணமாக டாக்டர், இஞ்சினியர், நர்ஸ், குமாஸ்தா, நீதிபதி, கராஜ், தொழிற்சாலைத் தொழிலாளர் ............ ஆகியோர் யூனிபோமாக உடை அணிவதை எளிதில் காணலாம். இவை தவிர்ந்து மேல்நாட்டு முறைகள் உற்பத்தி உறவோடு ஒட்டாது திடீரென வீதிகளில் மாறிவருவது தரகு முதலாளித்துவ ஆதிக்கத்தையே காட்டி நிற்கிறது. தேசீய உடைகள் அணிபவர் எந்த இடத்திலும் அந்தஸ்தில் குறைந்தவர்களாகவே கருதப்படுகின்றனர்.



**தரகு முதலாளித்துவ வளர்ச்சி :**

ஜனுவரி 17 அன்று நமது பிரதமர் மட்பாண்டக் கூட்டுத்தாபனம் இரு மிகப்பெரிய யப்பானிய தனியார் கம்பனிகளுடன் கூட்டாக ஆரம்பித்துள்ள மொசாக் ஓடு தயாரிக்கும் தொழிற்சாலையைத் திறந்து வைத்துள்ளார். ரூ. 111 லட்சம் மூலதனமுள்ள இத்தொழிற்சாலைக்கு நிச்சிமன், டான்ரோ ஆகிய யப்பானிய தனியார் கம்பனிகள் ரூ. 46 லட்சம் முதலீடு செய்துள்ளன. யந்திரங்கள். தொழில்நுட்பம் யாவையும் யப்பானியரே வழங்குவர். இவ்வாறாக பிற நாட்டு மூலதனங்கள் இன்றும் ஆளும் வர்க்கத்தின் ஆதரவுடன் நுழையும் வேளை முற்போக்கு சக்திகள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் அரசு ஆதரவாளர்கள் பிற நாட்டு மூல்தனங்களை தேசிய மயமாக்கு என்று குரல் எழுப்புவது வேடிக்கையாக மக்களுக்குத் தோன்றவே செய்யும். யப்பானிய ஆதிக்க வளர்ச்சியை குமரன் 18 இதழிலேயே ஜப்பானியர்களும் வந்து விட்டார்கள் என்ற தலைப்பில் நாம் அம்பலப்படுத்திஞேம். மத்திய வங்கியின் நவெம்பர் '74 அறிக்கையின்படி நாம் யப்பானிடமிருந்து இதுவரை பெற்ற பண்டக் கடன் ரூ. 2802 லட்சமாகும். திட்டக்கடன் எதுவுமில்லை. ●


புதியமுறைச் சுகாதாரக் கல்வி

எட்டாந் தரம் ரூ. 6-50

S. S. கருணைகரன் B. Sc. எழுதிய

புதுக்கணிதம் 7 — பகுதி I

விலை ரூ. 3/-

புதுக்கணிதம் 7 — பகுதி II

விலை ரூ. 3/-

புதுக் கணிதம் 8 — பகுதி I

விலை : ரூ. 3/-

புதுக் கணிதம் 8 — பகுதி II

விலை : ரூ. 4-75

விஜயலட்சுமி புத்தகசாலை

248, காலி வீதி : : வெள்ளவத்தை

கொழும்பு-6.

தொலைபேசி : 88920


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரசவம்

நாங்கள்
'மலடுகள்' அல்ல
அதனாற்றான்...... பிரசவம்
ஒன்றை நிகழ்த்த
அவசரப் படுகின்றோம்......
நாள் பார்த்து
தேதி பார்த்து
நிட்சயதார்த்தம்
நடாத்திய பின்னரே
எங்களது 'திருமணங்'ஞம்
நடைபெறும்.
நிறைமாதக் கர்ப்பிணிகளாய்
உருவெடுத்து....
'பிரசவம் காண
எண்ணி இருக்கிறோம்.
நோக்காடு ஏற்பட்டும்
பிரசவம் நிகழத் தடையாயின்
எங்களது வைத்தியர்கள்
சும்மா இருக்க மாட்டார்கள்
ஏனெனின் அவர்கள்
'ஆபரேசன்' செய்ய
படித்து இருக்கிறார்கள்.
நோய் நொடியற்றதும்
சுகமானதுமான
'புதிய சிசு' வொன்றை
பிரசவம் செய்ய
இரத்தம் சிந்த
எப்பெண்ணும் அஞ்சுவதுண்டோ?
— அன்புடீன்

கவிஞனாக வேண்டும்....
நானோர் கவிஞனாக வேண்டும்
வெந்து வெந்து வியர்வை சிந்தி
நைந்துபோன
உழைக்கும் கரங்கள்
உறுதி பெறவும் உயர்வுபெறவும்
சிறப்புப் பெறவும்
செழுமை பெறவும்
நானோர் கவிஞனாக வேண்டும்
- கோபால்

## நவீன பாரதம்

துகிலுரிந்தான் துச்சாதனன்
சூதாடி வெற்றிகொண்டான்
துரியோதனின் சகுனி
சாத்வீகம், சமாதானத்தால்
கோரினர் ஐவர்
''ஐந்து ராச்சியம்
ஐந்து ஊர்
ஐந்து வீடு''
நிராகரித்தான்
துரியோதனன் - பாண்டவர்
தூக்கினர் ஆயுதம் — அங்கே?
அகிம்சை எங்கே?
பாரதம் படித்துப்
பட்டம் பெற்ற
பண்டிதர் டாக்டர்
பாட்டாளிக்கு
நவீனபாரதம் படைக்கிறார்களா?
—திசும—

## பொசுங்கிவிடும்

இனவெறியைத் தூண்டியிங்கு
உழைக்கும் மக்கள்
ஐக்கியத்தைக் குலைப்பவரே...!
இனிமேலுங்கள் மணிமொழிகள்
மக்கள் செவி ஏறுதெங்கும்
மலர்ந்துவரும் பொதுவுடைமைப்
புரட்சித்தீயில் பொசுங்கிவிடும்
உங்களது பிதற்றலெல்லாம்!
- முல்லை வீரக்குட்டி

## அதிசயம்

சாய்ந்துபோன கோபுரமும்
ஷாஜஹானின் தாஜ்மகாலும்
எகிப்தினுடைய பிரமிட்டுகளும்
நீண்ட பெரும் சீன சுவரும்
இன்னும் என்னென்னவோவாம்
ஆனாலும் எனக்கு இங்கு
உழைப்பவர் இளைப்பதுவும்
ஏய்ப்பவர் கொழுப்பதுமே
பெரும் அதிசயமாகுது. - சித்தி




## ஜி. சி. ஈ. (உயர்தர வகுப்பு) நூல்கள் :

| | |
|---|---|
| உயர்தர இரசாயனம் | 36/– |
| தாவரவியல் — பரமானந்தன் 2 பகுதிகள் | 28/– |
| விலங்கியல் — சங்கரஐயர் 4 பகுதிகள் | 29/75 |
| விலங்கியல் பயிற்சிகள் | 3/- |
| இரட்சணிய யாத்திரிகம்: — சிலுவைப் பாடு | 2/– |
| A CONCISE ATLAS GEOGRAPHY OF CEYLON — Foreword by Prof. K. Kularatnam | 5/- |
| இலங்கையின் தேசப்படப் புவியியல் | 3/75 |
| தேம்பாவணி - மகனேர்ந்த படலம் | 4/– |
| கண்ணன் பாட்டு – பாரதியார் பாடல் | 6/– |

## ஜி. சி. ஈ. (சாதாரண வகுப்பு) பாட நூல்கள்:

| | |
|---|---|
| 1. நவீன இரசாயனம் I | 4/50 |
| 2. நவீன இரசாயனம் II | 8/75 |
| 3. நவீன உயிரியல் I | 5/00 |
| 4. நவீன உயிரியல் II | 6/50 |
| 5. நவீன பௌதிகம் I | 5/50 |
| 6. தமிழ் இலக்கியத் தொகுப்பு — விளக்கம் | 5/00 |
| 7. தமிழ் இலக்கியத் தொகுப்பு — வினாவிடை | 5/75 |
| 8. இந்து சமயம் - வினாவிடை முறை விளக்கம் | 6/00 |
| * புதுக்கணிதம் 7 பகுதி I | 3/- |
| * ,, பகுதி II | 3/- |
| * புதுக்கணிதம் 8 பகுதி I | 3/– |
| * புதுக்கணிதம் 8 - பகுதி II | 4/75 |
| * ஒன்றிணைந்த விஞ்ஞானம் | 3/00 |
| * தமிழ் 6 — பயிற்சி | 4/75 |
| * தமிழ் 7 — பயிற்சி | 5/75 |
| * அறிவுக் களஞ்சியம் | 5/50 |
| * புதுமுறைச் சுகாதாரக்கல்வி — எட்டாந்தரம் | 6/50 |
| * தமிழ்ப் பயிற்சி 2 | 3/50 |

கிடைக்குமிடம்:

**விஜயலட்சுமி புத்தகசாலை**

248, காலி வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு–6. தொலைபேசி : 88930




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தீண்டாச் சாதி

— பெருமாள் —

சிவராசா அழுக்குச் சேட்டு, ஊத்தை வேட்டி, வாராத தலையுடன் குமாரசாமி வீட்டை நோக்கி நடந்தான். குளிர்ந்த கடற்காற்று அவனது சோர்ந்த உடலைத் தழுவி இதமூட்டியது. தெரு விளக்குகள் பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டிருந்தன. உடைந்திருந்த ஒருசில பல்புகள் இடையிடை இருளைப் பரப்பியிருந்தன. குமாரசாமியின் வீட்டுப்படலையைத் தள்ளி உள்ளே நுழைய முயன்றான். படலையில் கை வைத்ததுமே வீட்டின் முன்புறத் தோட்டத்தில் தன் மகன் முகுந்தனைத் தூக்கியபடி உலாவிக்கொண்டிருந்த குமாரசாமி, சிவராசாவைக் கண்டதும் அவனைக் கீழே இறக்கிவிட்டு விரைந்து வந்தான். அவனது கண்கள் விரிந்து வியப்பையும் ஓரளவு அச்சத்தையும் காட்டின.

"சிவா! எப்பிடிச் சுகம்? இளைச்சுப் போயிருக்கிறாய்" என்று குசலம் விசாரித்தபடியே படலையைத் திறந்து வெளியேவந்த குமாரசாமி திடீரென உள்ளே திரும்பினான்.

"ஒரு நிமிஷம் நில். ஓடிவந்து விடுகிறேன்"

சிவராசா உள்ளே நுழையாது அப்படியே வெளியே நின்றான். முகுந்தன் படலை வரை நடந்துவந்து சிவராசாவை ஏற இறங்கப் பார்த்தான். அவனால் இனம்காண முடியவில்லை, சிவராசா அவனைத் தூக்க விரும்பினான். தன் அழுக்குநிலையை நினைந்து விட்டுவிட்டான். நாய் ஓடிவந்து வாலையாட்டி நக்க முயன்றது.

குமாரசாமி சேட்டைப் போட்டுக்கொண்டு வந்தான் நாயும் முகுந்தனும் வெளியே வராதபடி படலையைத் திறந்து சாத்தினான்.

"வா சிவா போவோம்"

"தானும் கூட்டி "

முகுந்தன் அழுது அடம் பிடித்ததைப் பொருட்படுத்தாது குமாரசாமி விரைந்தான்.

உரையாடியபடி காலி வீதியிலிருந்த ஒரு சைவக்கடைக்கு அழைத்துச் சென்றான்.

சிவராசாவிற்கு இடியப்பமும் தனக்குப் பிளேயின் டீயும் வரவழைத்தான். சிவராசா ஆர்வத்தோடு சாப்பிட்டான்.

"துரையை ரொம்ப நாளாய் இந்தப் பக்கமே காணவில்லை"

சர்வர் சண்முகம் ஆர்வத்தோடு பரிமாறினான்.

"உழுந்து வடையில்லையா?"



"துரை இந்த ஊருக்கே பல மாதமாய் வந்ததில்லைப் போலிருக்கு. உழுந்து மட்டுமா, கடலைப் பருப்பு, மைசூர் பருப்பு, உள்ளி எதையுமே கண்ணிலேயே காணமுடியாதே".

சிவராசா தான் கேட்டது தவறு என்பதை உணர்ந்து கொண்டான். மேலும் இடியப்பம் வரவழைத்துச் சாப்பிட்டான்

"இப்போதெல்லாம் நாக்கு, ருசி என்பதெல்லாவற்றையும் மறந்து விட்டேன். தேவியின் சமையலைச் சாப்பிட்டு எவ்வளவு காலமாகி விட்டது "

குமாரசாமியைப் பார்த்துச் சொன்னான்.

"எங்களுக்குப் பரம்பரையாகப் பழகிய சாமான்கள் ஏதாவது இப்போது கிடைக்கிறதா சுவையாகச் சமைக்க. வீட்டிலை தேவி எந்த நாளும் இல்லாததையெல்லாம் கேட்டுப் புறுபுறுத்தபடிதான்"

கருப்பட்டியைக் கடித்து பிளேயின் டீயைக் குடித்தனர்.

சிகரெட்டை வாங்கி ஊதியபடி இருவரும் காலி வீதியைக் கடந்தனர்.

"நான் இப்போது கிடைக்கும்போது பீடி மட்டுமே குடிக்கிறேன்"

சிவராசா சொன்னான்.

குமாரசாமியின் தெருவிற்கு அடுத்த வீதி வழியாக கடற்கரையை நோக்கி நடந்தனர்.

சிவராசா பெரும்பாலும் அரசியலே பேசினான். குமாரசாமி இடையிடை வினா எழுப்பி அவனிடமிருந்து விஷயங்களைக் கிரகிக்க முயன்றான். தன் கருத்துகளை வெளிப்படையாகக் கூறவில்லை. குமாரசாமியின் கோட்பாடுகளில் குறையிருப்பதைச் சுட்டிக்காட்டும் விதமாக இடையிடை கேள்விகளைக் கேட்டான். குமாரசாமியின் தற்போதைய நழுவல் பேச்சுகள் சிவராசாவிற்கு வியப்பளித்தன; வெளியே இருப்போர் தமது செயலுக்கு ஏற்றபடி சித்தாந்தங்களை திரித்துக்கொள்கிறார்களா என்று சந்தேகப்பட்டான்.

கடற்கரையில் கற்பாறைகள் மேல் நீண்ட நேரம் இருவரும் உட்கார்ந்து உரையாடினர். அலையோசை தவிர ஒரே அமைதி. சிவராசா தனக்கு ஏற்பட்ட புதிய அனுபவங்களையெல்லாம் கூறினான்.

முன்னர் பல தடவைகள் அங்கு வந்திருந்து மணிக்கணக்காக உரையாடுவதற்கும் அன்றைய நிலைக்குமிடையில் வேறுபாடுகள் இருப்பதை இருவரும் உணர்ந்து கொண்டனர். ஏதோ ஒருவகை மாறான உணர்வு நிலை இருவருக்கிடையேயும் வளர்ந்து வந்திருப்பது தெரிந்தது.

"குளிர்காற்று வீசுகிறது இனிப்போவோமா?"

குமாரசாமி கூறியபடி எழுந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனக்கும் ஒரே உடல் உளைச்சலாயிருக்கிறது. மூன்று நாளாய் நிம்மதியாகத் தூங்க இடமே கிடைக்கவில்லை.''

இருவரும் குமாரசாமி வீட்டுத்தெரு வழியே இறங்கி நடந்தனர். சாவதானமான நடை. குமாரசாமி சிறிது நேரம் மௌனமாக நிலத்தைப் பார்த்தபடி நடந்து கொண்டிருந்தான்.

திடீரென சிவராசாவைப் பார்த்துக் கேட்டான்:

''நீ எங்கே போகப்போகிறாய்? கைச்செலவிற்கு பணமேதாவது வேண்டுமானால் தருகிறேன்.''

சிவராசா ஒரே அதிர்ச்சியடைந்தான். அதை வெளியே காட்டாத விதமாகச் சொன்னான்:

''உங்கள் வீட்டில் தங்க என்றுதான் வந்தேன். நீ இப்பிடிக் கேட்கிறாயே?''

''அதெப்பிடி சிவா முடியும். நான் இப்போது அரசாங்கத்தில் வகிக்கும் பதவி பற்றி உனக்குத் தெரியாதா? இந்த நிலையைப் பழுதாக்குவது நல்லதா? நீயே சொல்லு''

''நான் பழுதாக்கவா நினைக்கிறேன். இரவு தூங்கிவிட்டு விடிய முன்னர் எழும்பிப் போய்விடுவேன்''

''அது கூட என்றைக்கும் ஒரு கறையாகத்தானே இருக்கும்.''

இருவரும் வீட்டுப்படலைவரை வந்துவிட்டனர். அறை விளக்குகளெல்லாம் அணைந்துவிட்டன, ஒரு பல்ப் மட்டும் வரவேற்பறையில் எரிந்துகொண்டிருந்தது.

''தேவியையும் முகுந்தனையும் ஒரு தடவை பார்த்துவிட்டுப்போய் விடுகிறேன்''

''இருவரும் தூங்கியிருப்பார்கள். அறையில் வெளிச்சமேயில்லை. மற்றொரு முறை வா சிவா, பார்க்கலாம்''

குமாரசாமி மழுப்பிப் பேசினான். இதயத்திலிருந்து வெடித்து வந்த துன்பத்தையும் கவலையையும் சிவராசா கட்டுப்படுத்த முயன்றான்.

''இதுவே கடைசித் தடவை. நான் போய் வருகிறேன். இந்தப் பக்கமே இனிமேல் ஒரு போதும் வரமாட்டேன்''

''ஏன் சிவா அப்பிடிப் பேசுகிறாய்? நான் சொல்வதில் ஏதாவது தவறு இருக்கிறதா?''

''இல்லை நான் கற்ற சித்தாந்தத்தை மறந்து உன்னிடம் தங்குவதற்காக வந்தேனே. தவறு என்மேலேதான். உனக்கு சொத்து சுகம் இருக்கிறது. அவற்றை இழப்பதற்கு எப்படித் துணிவாய்? என்னோடு பழகிய பாட்டாளிகளுடன் சமன்படுத்தி உன்னைத் தவறாக கணித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டேன். நட்பு, பழக்கம், பாசம் ஆகியவை வர்க்கத்தைக் கடந்தவை என்று மயங்கியிருந்தேன். இன்று தெளிவு ஏற்பட்டுவிட்டது. போய் வருகிறேன்''.

சிவராசா கடற்கரைப் புறமாகத் திரும்பினான். குமாரசாமி முன்மறித்து சமாதானம் கூற முயன்றான்.

''ஏன் சிவா உப்பிடிச்சொல்லி என்னைப் புண்படுத்துகிறாய்?''

''நான் புண்படுத்துவதற்காகச் சொல்லவில்லை உண்மை சுடத்தான் செய்யும். நாங்கள் இப்போது தீண்டாச் சாதிதான். எங்களுடைய சாதி என்றால் பாட்டாளிகள்தான். எந்தக் குடிசையும் எந்த இரவில் சென்றாலும் எம்மை வரவேற்றதே அன்றி ஒதுக்கியதில்லை. தங்கள் உணவை எங்களுக்குத் தந்து பட்டினி கிடந்ததைப் பார்த்திருக்கிறேன். நீ உன் மனம் புண்படுகிறதைப் பார்க்கிறாய் நாங்கள் பட்ட துன்பம், இன்றும் படும் துன்பம் பற்றி நீ அறியமாட்டாய். உடல் ஒய்ந்து தூங்குவது தவிர நாங்களாக என்றும் அமைதியாக தூங்கியதில்லை. அவர்கள் கையில் அகப்பட்டு சித்திரவதைப்படுபவர்களையெல்லாம் பார்த்து எங்கள் நெஞ்சம் மேலும் வைரமாகிறதேயன்றி கோழையாகிவிடவில்லை. உன்னோடு பேசவே நான் விரும்பவில்லை. போய் வருகிறேன்.''

சிவராசா மீண்டும் முன்னேறினான். உணர்ச்சியில் அவனது உடல் துடித்துக்கொண்டிருந்தது.

''கைச்செலவிற்கு இதை வைத்துக்கொள்''

குமாரசாமி பத்து ரூபா நோட்டு ஒன்றை அவனிடம் திணிக்க முயன்றான்.

''இந்தப் பணமே எனக்கு வேண்டாம். நான் நடந்தே போவேன். பணம் மட்டுமே வேண்டியதென்றால் லட்சக் கணக்காகக் கொள்ளையடிக்க எங்களால் முடியும்.''

''சிவா ஆத்திரப்படாதே. மற்றொரு தடவை கட்டாயம் நீ வர வேண்டும்.''

''உயிரோடு இருந்தால் மற்றொரு தடவை கட்டாயம் வருவேன். நாம் இப்சிக்கப்பட்டாலோ சிறைப்படுத்தப்பட்டாலோ கொல்லப்பட்டாலோ அதற்காகப் பரிதாபப்பட்டு எம்மை கோழைகளாக்கி மட்டும் விடவேண்டாம். நான் மறுதடவை உங்களைக் காண வருவதானால் இன்று எங்களைப் போன்றவர்களைத் தீண்டாச் சாதி ஆக்குகிறீர்களே, உந்தச் சொத்துடைய வர்க்கம் தீண்டாச்சாதி ஆன பின்னரே வருவேன். பாட்டாளி வர்க்கம் என்றும் தூங்கிவிடப்போவதில்லை அதனிடம்தான் மார்க்ஸிசம், புரட்சிகர டயலெக்டிஸ் இருக்கிறது என்பதை உனக்கு நினைவூட்டுகிறேன்''

ஏறு நடையுடன் சிவராசா கடற்கரையை நோக்கி நடந்துகொண்டிருந்தான். அவன் உருவம் மறையும் வரை குழம்பிய சிந்தனையுடன் தன் வீட்டையும் அவனையும் மாறிமாறிப் பார்த்தபடி குமாரசாமி நின்றான் 'தீண்டாச்சாதி' என்று சிவராசா கூறிய வார்த்தை அவன் நெஞ்சை சுட்டுக்கொண்டேயிருந்தது. ●

# இனியும் வேண்டாம்

பேணி யெடுத்துக் கை நீட்டிப்
பிச்சை பெற்றுப் பின்னை வந்தும்
கோணிச் சாக்கு
எடுத்தலைந்து
குப்பைக் காகிதம்
பொறுக்கி விற்றும்
மூட்டை இறக்கி முதுகு நோக
மூணுரூபா வலிந்து பெற்றும்
பங்கீட்டுச் சீனி வாங்கிப்
பலதாய் விலை
கூட்டி விற்றும்
எங்களின்
குடும்பத்தில் உள்ளவர்கள்
பொங்கி ஒரு வேளைகூட
நாள்தோறும் புசித்திலலை
இந்த நிலைமை யெல்லாம்
எம் நாட்டில் நீடிக்க
காலிமுகத் திடலில் உள்ள
கட்டிடத்தன் இருந்து
போலிக்குச் சோஷலிசம்
பேசி வருல் தலைவர்கள்
நாளை நடக்கும் தேர்தலில்
நாற்பத்தொரு கார் கூட்ட
சொல்லும் பாராளுமன்ற
சோஷலிசம் இனியும் வேண்டாம்

— மணிமைந்தன்

## தேவை

தூசு உள்ள இடத்திலே தான்
துப்புத்தடிக்கு வேலையுண்டு
நோயுள்ள இடத்திலேதான்
வைத்தியனுக்கு வேலையுண்டு
இருளுள்ள இடத்திலே தான்
விளக்குக்கு வேலையுண்டு
இங்கும் இவை தேவை
ஏன் என்றால்
சுரண்டல் தூசை அகற்றுவதற்கு
துப்புத்தடி தேவையிங்கு
முதலாளித்துவ நோய் நீக்க
அறவை வைத்தியன்
அவசியம் தேவை
பாராளுமன்ற இருள் அகற்ற
பரவும் செந்தீ விளக்குத்தேவை

— வேல் சண்முகராஜா

•••◦○◦•••

உழைத்தவன் உணவில்லாமல்
இறந்திட அவனுழைப்பை
உறுஞ்சிடும் கூட்டமின்னும்
சுகத்தினுள் மிதப்பதா...?
ஹே எழுந்து வா!
எங்களுக்கு
இழப்பதற் கெதுவுமில்லை!

— முல்லை வீரக்குட்டி


விரைவில் வெளி வருகிறது!

எம். பரமானந்தன் எழுதிய

**புதிய விஞ்ஞானம் 8ம் வகுப்பு**

தமிழவேள் எழுதிய

**சைவசமயம் 9**

புதிய பாடத்திட்டம்

**தமிழ் 9 விளக்கப் பயிற்சி**

**தமிழ் 3 விளக்கப் பயிற்சி**

**இலங்கையின் சமூக வர்க்கங்கள்**

விலை: -/60 சதம்

கிடைக்குமிடம்:

**விஜயலட்சுமி புத்தகசாலை**

248 காலி வீதி — வெள்ளவத்தை, கொழும்பு - 6. தொலைபேசி: 88930




## கலகம் பிறந்தால்

சமாதானம் சாத்வீகம்
அஹிம்சை இவைகளெல்லாம்
எவ் வர்க்க
நலனுக்காய்
யாரிங்கு சொன்னவர்கள்?
அதிகார வர்க்கத்தார்
ஆட்சியில் நிலைப்பதற்காய்
அவர் வர்க்க காவலர்கள்
ஆக்கி வைத்தவையே
ஏனென்றால்
நம்முழைப்பு
நம் இரத்த வியர்வைகளை
உவப்புடனே உறுஞ்சி
உயர்ந்த பெரும் மாடிகளின்
உச்சிகளில் குசியாக
உறங்குகின்ற துரை நாயின்
வர்க்கமதை நம் துவக்கு
தோட்டா துளையாதிருக்க
மட்டுமன்றி
ஆளுகின்ற வர்க்கத்தார்
நமையடக்க நம்முதுகில்
சவாரி செய்வதற்காய்
ஆன இந்த தத்துவங்கள்
நமக்குத் துணைபுரியா!
ஏனென்றால், நாம் கற்ற
சரித்திரத்தை புராணத்தை
சற்று பார்ப்போம் ஆகில்
சூரன், இரணியன்
இராவணன், துரியோதனன்
இவர்கள் அழிந்ததெல்லாம்
தொடுக்கப்பட்ட யுத்தத்தால்
இன்னும்,
சார் கொடுமை அழிந்திட,
ரஷ்யாவில் நடந்ததையும்
சீனத்தில் நடந்த அந்த
செகப்புரட்சி கதைகளெல்லாம்
நெஞ்சத்தில் நிலைத்திருக்கு
ஆனதினால் தோழர்களே
எதிரிகளின் பாசறையில்
வெடிக்கின்ற வேட்டுக்கு
எதிர் வேட்டு வைப்பதற்காய்
கலத்தை மூட்டிடுவோம்
எழுந்திடுங்கள்!

— ஆ. இராஜலிங்கம்

## நினைப்பு

முதலாளி—
நாங்கள் இரும்புமலை
அதனுலெங்களை
அசைக்க முடியாது
தொழிலாளி—
நாங்கள் நெருப்பு உலை
இதனுலுங்களை
உருக்க முடியும்.

— ஓடையூரான்

•••◦○◦•••

## கொடுமை

குளிர்காற்று வீசுமென்று
மாடி வீட்டுச் சாளரத்தை
சாத்துகின்றீர்!
இங்கே...கும்மிருட்டில்
குளிர்காற்றில்
பலவுயிர்கள் குடிசையினுள்
படுமவஸ்தை பொறுக்குதில்லை.
குளிர்காற்று சண்டமாருதமாய்
வீசும்போது...கவனம்!
உங்கள் சாளரங்கள்
துகள் துகளாய்ப் பறந்துவிடும்.

— ஏவெம்மே நஸீர்

•••◦○◦•••

நாங்கள்
காளையெம் பாசறையில்
கட்டுண்ட போர்க்காளை!
நாளையப் போரணிக்கு,
நம்மவரைத் தயார்ப்படுத்த
வாளையெடு! போராடு!
வஞ்சகரின் தலையெல்லாம்
பாளையெனச் சின்டாடு
பாய்ந்துவிடு, வேங்கையென!
என்று
குமுறுகின்ற எரிமலையாம்,
கொந்தளிக்கும் அலைகடலாய்
ஆர்ப்பரித்து முரசறையும்
அசல்காளை; சினக்காளை!
அடலேறு; செங்காளை!
புரிகிறதா, இப்போது?

— ஏறாவூர் யூசுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிவிட்டீர்களா !

'தமிழவேள்' சிறப்புற எழுதிய பிற நூல்கள் :

❊ தேம்பாவணி – மகனேர்ந்த படலம்
விளக்கவுரை. க. பொ, த. (உயர்தரம்) 4–00

❊ திருவெம்பாவை – திருவம்மானை
விளக்கவுரை க. பொ த (உயர்தரம்) அச்சில்

❊ திருக்குறள் - அதி : குடிமை – கயமை.
விளக்கவுரை க. பொ. த. (உயர்தரம்) அச்சில்

❊ தமிழிலக்கிய வினு – விடை
க. பொ. த. (சாதாரணம்) 5-75

❊ தமிழ் 6 – பயிற்சி 4-75

❊ தமிழ் 7 – பயிற்சி 5-75

❊ தமிழ் இலக்கியத் தொகுப்பு - விளக்கம்
க பொ த. (சாதாரணம்) 5–50

❊ கண்ணன் பாட்டு – பாரதியார் பாடல்
க. பொ. த. (உயர்தரம்) ரூ 6–00

❊ சைவசமயம் – வினுவிடைமுறை விளக்கம்
க பொ த. (சாதாரணம்) 6–00

செ. கணேசலிங்கனின்
கொடுமைகள் தாமே அழிவதில்லை ரூ. 3–00

கே. எஸ். சிவகுமாரனின்
Tamil Writing in Sri Lanka ரூ 5-75.

இர சந்திரசேகரன் எழுதிய
விந்தைகள் செய்த விஞ்ஞானிகள்
விலை : ரூ. 3-90

கிடைக்குமிடம் :
விஜயலட்சுமி புத்தகசாலை
248, காலிவீதி — வெள்ளவத்தை,
கொழும்பு–6. தொலைபேசி: 88930



# நாங்கள் இலங்கையர்கள்

— சாருமதி —

எம் தொழிலிடத்து தொழிலாளி
சைமனெருவன் சிங்களவன்
அவனுக்கு நாங்கள்
"ஐயா மார்கள்"!

மணியத்தின் அலட்சியம்
புரிந்து கொண்டாலும் சைமன்
அமைதியின் அடக்கமாய் நின்று
"மாத்தயா" என்ருன்.

காதிருந்தும் செவிடாகிப் போன
மணியத்தின் இதயத்தை
உணர்ச்சிக் கவிஞரின்
உரைப்புக்கள் கல்லாக்கி விட்டதனை
கண்டபோது 'தமிழ்' பொல்லாதது
என நினைக்க நான்
சைமனை நோக்கி
சைகையால் கேட்டேன்
என்ன வென்று?

வெளியே பட்டினியால்
ஓர் உயிர்
நினைவிழந்து கிடக்கிறது
அவளுக்கு உதவ
பத்து ரூபாய் கடன் வேண்டும்
சம்பளம் வரும்போது
அறவிடலாம் என்ருன் சைமன்.

இரக்கம் உனக்கு மட்டும் சொந்தமில்லை
இதயம் எனக்கும் இருக்கிறது என்று
உரைத்து விடலாமென நினைத்த நான்
அதை அடக்கிக் கொண்டு
சட்டையை எடுத்து மாட்டி
விழுந்து கிடக்கும் உயிரின்
இடத்தை நோக்கி நகர்ந்தேன்

அழுது வடியும் கண்ணீருடன்
எழுந்து இருந்த அவ்வுயிரின்
அருகில் சென்று நான் குனிந்து
உனக்குப் பெயர் எது வென்றேன்.

அழுது வடியும் கண்ணீருடன்
ஒரு சரித்திரத்தையே ஒப்புவித்த
விழுந்து கிடந்த உயிர்
தன் பெயர் பொன்னம்மாவென் று
"அழுகு தமிழில்
பழகு மொழியில்"
அழுத்தம் திருத்தமாய்ச்
சொன்ன போது
எனது விழிகள் நிமிர்ந்தன.

சைமனின் விழிகள்
கலங்கிச் சிவந்து
கடை விழி யோரம்
நீர் அரும்பை உதிர்த்தது.

அது அழுகையா?
அல்லது ஆத்திரமா?

அவள் சிங்களவளா
அவள் தமிழிச்சியா?

எனது இதயம்
ஒரு துடிப்புத் துடித்தது
அது —
பொன்னம்மாவிற்காகவா?
சைமனுக்காகவா?
அல்லது ஒரு
வர்க்கத்திற்காகவா?

போட்ட கையை
பையிருந்து வெளியெடுத்து
பச்சை நோட்டொன்றை
சைமனிடம் நீட்டியபோது

அவன்
நோட்டை மட்டும்
பற்ற வில்லை
என் கையையும்
சேர்த்துப் பிடித்தான்.

நான்கு கண்களின்
கண்ணீர்ப் பிறப்புக்கள்
இரண்டு கரங்களில்
ஒன்ருய் விழுந்து
ஓடி ஒழுகி
கீழிருந்த இரண்டு
கண்களின் கண்ணீருடன்
கலந்த போது.......

மீண்டும் மீண்டும்
எங்கும் எங்கும்
எனக்குக் கேட்டது
நாங்கள் இலங்கையர் !
நாங்கள் இலங்கையர் !
என்ற கோஷம்.

பக்கத்து வீட்டு
பரமசிவத்தின்
"குறாண்டிக் ரேடியோ"வில்
பீக்கிங் வானொலி
பிடிபட்ட போது
"உலக மக்களே
ஐக்கியப்பட்டு
சகல பிற்போக்காளர்களையும்
தோற்கடியுங்கள்" என்ற
சத்தியத்தின்
எங்கள் கண்ணீருடன்
சங்கமித்தது.

# சரியான கணக்கு

— ஆ. இராஜலிங்கம் —

'நேற்றுத் தந்த வீட்டுக்கணக்கை லெச்சுமி படி''

இராமநாதன் ஆசிரியர் கையிலே ஆட்டுமாறு தடி ஒன்றைச் சுற்றியபடி ஆணையிட்டார். லெச்சுமி எழுந்து தயங்கியபடி படித்தாள்.

''ஒரு தோட்டத்தொழிலாளிக்கு ஒருநாளுக்கு 10 ரூபா கூலி என்றால் 30 நாட்களுக்கு எவ்வளவு கூலி கிடைக்கும்?''

''சரி, கணக்கு செய்துகொண்டு வராதவர்களெல்லாம் எழும்ப லாம்''

ஏழு எட்டு மாணவ மாணவியர் எழுந்து நின்றனர்.

''சீதை நீ ஏனடி கணக்குச்செய்துகொண்டு வரேல்லை''

''கணக்கு பிழைங்க சேரு''

''என்னடி சொன்னாய்?''

இராமநாதன் சீறினார்.

''எந்தத் தோட்டத் தொழிலாளிக்கும் நாளுக்கு 10 ரூபா கூலி கிடைக்காது சேர். மற்றது 30 நாள் வேலை எங்கே கிடைக்கப் போகுது? இப்பெல்லாம் 15, 16 நாளுக்கே கிடையாது சேர்''

''யாரடி உனக்கு இதெல்லாம் சொல்லித்தந்தவன்''

''உண்மைதானே சேர்'' சீதை நிமிர்ந்து கூறிவிட்டு தலையைத் தாழ்த்திக்கொண்டாள்.

''அவனை எனக்குத் தெரியாதென்று நினைக்கிறியாடீ''

''உங்களுக்குத் தெரிந்தால் ஏன் சேர் சீதையிடம் கேட்கிறீங்க''

செல்லப்பன் சீதைக்கு உதவியாக குரல்கொடுத்தான்.

''நீகூட எவனிட்டைப் பாடங்கேட்கிறாய் என்று எனக்குத் தெரியுமடா''

இராமநாதன் அவனை அடக்கினான்.

முருகானந்தனும் ஒரு தோட்டத் தொழிலாளியின் மகன்தான். முன்னர் அவரிடம் ஐந்தாம் வகுப்புவரை படித்தவனே. படித்தவன் என்பதிலும்பார்க்க அவருக்குப் பணிவிடைகள் செய்தான் என்றே கூறவேண்டும் அதோர் பள்ளிக்கூடமாகவே தொடக்கப்படவில்லை. வெள்ளைக்காரன், தோட்டத்துப் பயிர்களுக்கு லயத்துச் சிறுவர்கள் சேதம் விளைவிக்காமலிருப்பதற்காக அடைத்துவைக்கப்பட்டிருந்த தடுப்பு முகாமே அதுவாகும். பிள்ளைக்காம்புரா என்ற பெயரும்பெற்று இன்று பள்ளிக்கூடமாக மாறியுள்ளது.

பாடசாலைக்கு வந்ததும் தோட்டப்பிள்ளைகளுக்கு வாத்தியார் வேலைகள் வைத்திருப்பார். அவரது காய்கறித் தோட்டத்தில் சிலர் வேலை செய்வர். வேறு சிலர் அவரது கோழிப்பண்ணையைக் கவனிப்பர்; மாட்டிக்கொட்டிலுக்கு ஒரு சிலர், தண்ணீர் எடுத்துவர, சமையலைக் கவனிக்க...... இப்படியாக வேலைகள் தாராளமாக இருக்கும்.

வேலைகள் ஓரளவு முடிய இராமநாதன் மணியை அடிப்பார். எல்லோரும் ஓடிவருவர். முதலாம், இரண்டாம் வகுப்பு மாணவர் நிலத்திலேயே இருப்பர். மற்றவர்களுக்கு வாங்குகள் போடப்பட்டுள்ளன. எல்லா வகுப்புகளையும் அவரே கவனித்துக்கொள்வார்.

முருகானந்தனும் இவ்வாறு படித்து வந்தவனே. அவன் குடும்பத்தில் கடைசிப்பிள்ளையாக இருந்ததால் மற்ற எல்லோரும் உழைப்பதில் சிக்கனமாக வாழ்ந்து அவனை பட்டணப் பாடசாலைக்கு அனுப்பினர். அவன் அங்கு ஜி. சி. ஈ. சாதாரண வகுப்பில் படித்துவிட்டு தற்போது வேலையில்லாது தோட்டத்தில் வசிக்கிறான். தோட்டத்தில் கூலி வேலை செய்வதை அவன் பெற்றார், அண்ணன்மார் விரும்பவில்லை. மாலை நேரங்களில் தோட்டத்துச் சிறுவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கிறான் என்பதை அவர் கேள்விபட்டது மட்டுமல்ல மாணவர்களின் துடுக்கான பேச்சிலுமிருந்து கண்டுகொண்டார். முருகானந்தனிடம் படிப்பவர்கள் ஆசிரியரை மதியாது பேசுவதும் அவருக்கு உள்ளூர அவன் மேல் ஆத்திரத்தையே வளர்த்தது. அவன் புரட்சிக் கட்சிக்கு வேலை செய்வதாகவும் இராமநாதன் கேள்விப்பட்டிருந்தான்.

''சீதை உன் கணக்குக் கொப்பியோடை இங்கே வாடீ''

அவள் தயங்கியபடியே அவர் முன்னே சென்றாள்.

''தாடி கொப்பியை''

கொப்பியை பிடுங்கியபடியே முருகானந்தன் மேல் இருந்த கோபத்தை அவள்மேல் கைத்தடியால் தீர்த்தார். அவள் கத்தவில்லை.

அவளது கணக்குக்கொப்பியை புரட்டிப்பார்த்தார்.

''இந்தக் கொப்பியிலை வேறு கணக்கு எழுத ஆரடி சொன்னது?''

இராமநாதன் அவளை அதட்டினார்.

''வேறு கொப்பி வாங்க காசில்லை சேர்''

''அதுக்காக''

இராமநாதன் கவனம் முழுவதும் அங்கு எழுதிச்செய்யப்பட்டிருந்த மற்றோர் கணக்கின்மேல் சென்றது. தீயை மிதித்தவர்போல அவருக்கு பதட்டம் ஏற்பட்டபோதும் தொடர்ந்து படித்தார்.

இராமாயி ஒரு நாளைக்கு 45 ரூத்தல் தேயிலை பறிக்கிறாள். ஒரு ரூத்தல் பச்சைக்கொழுந்தின் விலை 40 சதமாயின் அவளது உழைப்பின் பெறுமதி யாது? அவளது ஒரு நாளைய சம்பளம் ரூ. 3 32 சதமாயின் அவளின் உழைப்பின் ஒரு நாளில் முதலாளியால் சுரண்டப்படும் கூலி எவ்வளவு?

| | | |
|---|---|---|
| 1 ரூ கொழுந்தின் விலை | = | 40 சதம் |
| 45 ரூ ,, ,, | = | 40 × 45 சதம் |
| ∴ ஒரு நாள் உழைப்பின் பெறுமதி | = | ரூ. 18.00 |
| இராமாயியின் ஒரு நாள் கூலி | = | 3.32 |
| ∴ 1 நாளில் முதலாளியால் சுரண்டப் படும் உழைப்பின் பெறுமதி | = | ரூ.18 00-3.32=ரூ.14.68 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**KUMARAN-44** 201, DAM STREET, COLOMBO-12.
இலங்கையில் செய்திப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது

குடும்பத்திட்டம், கருச்சிதைவு, கருத்தடைச் சாதனங்களிடை மறைந்திருக்கும் அறியாமையை பல படித்துப் பிரசாரம் செய்பவர்களிடையேயே காணலாம். உற்பத்தி உறவையொட்டி இப்பிரச்சனை ஆராயப்படும்போதே பலரது அறியாமையை மட்டுமல்ல முதலாளித்துவத்தின் வியாபார தந்திரத்தையும் நீங்கள் எளிதில் அறிந்து கொள்ளமுடியும். குடும்பத் திட்டமும் கருத்தடையும என்ற மாதவன் கட்டுரையை தவருது படிக்க.

1, 2, 3ம் உலக நாடுகளிடையே இன்று வளர்ந்துவரும் முரண்பாடுகளை மூன்றுலக முக்கோண முரண்பாடுகள் என்ற கட்டுரை தொட்டுக்காட்டுகிறது. அதிகம் சுரண்டப்படுவது மூன்ருவது உலக நாடுகளேயாகும். அதனுல் புரட்சிகர எழுச்சியும் இந்நாடுகளிடையே வலுப்பெறுவது தவிர்க்கமுடியாதது. இந்நாடுகள் தம் காலில் தாம் நிற்கமுடியும் என்ற தன்னம்பிக்கையோடு அணிதிரளும்போது பாதிக்கப்படப்போவது 1, 2வது உலக நாடுகளேயல்லாது 3ம் உலக நாடுகளல்ல.

பாட்டில் தெறித்த பொறி தொடர்கிறது. முதல் கட்டுரை ஏற்படுத்திய எழுச்சியை நாம் வந்த கடிதங்கள்மூலம் காண்கிறோம். புரட்சி நிலவுடைமையை உடைக்கும்போது அதன் சித்தாந்தங்களும் உடைவது தவிர்க்கமுடியாததே. திருக்குறளின் பொய்மையும் ஒழித்தெறியப்படும் காலம் வெகு தூரத்திலில்லை.

சட்டம், மதம், கல்வி, மொழி, கலை இலக்கியம் ஆகியவற்றில் தரகு முதலாளித்துவம் எவ்வாறு செயல்படுகிறது என்பது இவ்விதழில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பூஷ்வா வர்க்கம் புரட்சியாளர்களை பகைவர்களாக, கோழைகளாக, கொலையாளிகளாக நிரூபித்துத் தண்டித்துவிடுகிறது; சிறு முதலாளித்துவ வர்க்கம் அவர்கள்மேல் அனுதாபம்கொண்டிருந்தாலும் அச்சத்திஞல் தீண்டத்தகாதவர்களாகவும் கொண்டுவிடுகின்றது. புதிய தீண்டாச்சாதி என்ற சிறுகதை நட்பு, உறவு, பாசம் ஆகியவை வர்க்கம் கடந்தவையல்ல என்பதை வெளிப்படுத்துகிறது புதிய கணக்கு தேயிலைச் சுரண்டலை கணக்கிடுகிறது

மயக்கங்கள் தீரட்டும் மெய்யுள் என்ற போர்வையுள் மறைந்திருக்கும் பொய்மையைச் சாடுகிறது. ''அகிம்சை வந்த அங்கேதான் தோன்றியது நக்சல்பாரி'' என்று பாடுகிருர் வரதபாக்கியான். இந்திய, இலங்கை ஆளும் வர்க்கத்தவருக்கு, அவர்களின் பின்ஞல் நிற்கும் பலாத்கார உருவங்களான பொலிசார், முப்படையினருக்கு, சர்வோதயப் பிரசாரம் செய்வது நல்லது. நசிந்த மக்களுக்கு ஏன்?

இலங்கையின் சமூக வர்க்கங்கள் சிறு நூலாகிவிட்டது. தேவைப்படுவோர் எழுதிப்பெறுக.

இப்பத்திரிகை கொழும்பு-12, 201, டாம் வீதியில் வசிக்கும் மீ. கணேசலிங்கன் அவர்களால், அதே முகவரியிலுள்ள குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
நிருவாக ஆசிரியர்: மீ. கணே[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org